CANADA OLD STUDENTS' ASSOCIATION OF PUNGUDUTIVU

கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

பெருமையுடன் வழங்கும்

பூவரசம் பொழுது 2014

20-12-2014

புங்குடுதீவு கிராமத்தின் கல்வி நிலை அன்றும் இன்றும்

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

19வது ஆண்டில்

பூவரசம் பொழுது





விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள் உறங்குவதில்லை

Chinese Cultural Centre-Scarborough, 5183 Sheppard Ave E, Toronto, ON. M1B 5Z5



புங்குடுதீவு
PUNGUDUTIVU 2015
கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்
CANADA OLD STUDENTS ASSOCIATION OF PUNGUDUTIVU
ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்



அமரர் உயர் திரு

வே.க. சோமசுந்தரம் (சமாதான நீதவான்)

முன்னாள் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்

அவர்களின் ஞாபகார்த்த கலையரங்கு



எமது சொந்த அலுவலகம்



தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வாண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பனுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அளந்து
வளர் மொழி வாழிவே!

Canada's National Anthem

O Canada
O Canada! Our Home and native land!
True Patriot love in all the songs command.
With glowing hearts we see thee rise!
The true north strong and free!
From far and wide, O Canada!
We stand on guard for thee,
God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.

புங்குடுதீவு கீதம்

புங்குடுதீவெனும் பொன்னகமே
புங்குடுதீவெனும் பொன்னகமே - அலை
பொங்கும் கடலணை சூழ்நிலமே!
தெங்கு, பனை வளம் கொள்நிலமே - கமம்
செய்யும் பெருமக்கள் உய்வகமே.

செல்வம் கொழிக்கின்ற பெருவணிகக் - கல்வித்
தேனை அளிக்கின்ற நல்லறிஞர்
வெல்லற் கரிதான நெஞ்சுரத்தோர் - சேர்ந்து
வாழும் தனித்துவத் தீவகமே!

தேய்வ அருட்கொடை கொண்டபதி - தொல்லை
நீங்க அனைத்தையும் வென்றபதி
உய்யவழி காட்டும் நான்மதம் - ஞானத்(து)
உண்மையில் ஒன்றெனக் கண்டபதி.

கிழக்கதன் எல்லையே வல்லன் என்றால் - குறி
காட்டுவான் இறுபிட்டி மேற்கெனலாம்
செழிப்பொடு பெருங்காடு நடுவே உண்டு வீரா
மலை தெற்கே வடக்காக ஊரதீவாம்.
ஏழ் சிறு தீவுகள் மத்தியிலே - நின்று
இயங்கி ஒளிகாலும் முத்தகமே!
யாழ் நகர் நெற்றியில் இட்டதொரு - விழிப்
பொட்டென நின்றொளிர் தீவகமே.

கோயில், குளம், பள்ளி கலைகளுண்டு - திசை
காட்டும் கலங்கரைத் தீபமுண்டு
வாயில் என நிற்கும் மடத்துவெளி - கற்பை
வழுத்திடும் கண்ணகித் தெய்வமுண்டு.

கரைகள் எங்கும் காவல் தெய்வமுண்டு - மணி
பல்லவத் தன்னையும் பக்கம் உண்டு
வரையில் வரலாற்றுப் பெருமையுண்டு - கண்ணன்
வாழுமோர் பிருந்தா வனமிதுவே!

விழா கீதம்

புங்குடுதீவு மக்கள் நடாத்தும் விழா
பூவரசம் பொழுதல்லவா!

மாலையில் ஓர்நாள் மயங்கிடும் வேளையில்
மாண்புடன் நடத்திடும் மங்கள நிகழ்வுகள்
இதயங்கள் யாவும் இனித்திடும் இனிமையில் – என்றும்
இதை எண்ணி நெஞ்சங்கள் நிறைந்திடும் நினைவினில்
– புங்குடுதீவு

தீவகம் தன்னில் ஓர் புங்கை நகர்
தீந்தமிழ் வளர்ந்த எம் பூமியது
உலகெங்கும் உன் மக்கள் உயர்ந்திடுவார்! – அங்கு
உன்பெயரை நிலை நாட்டிடுவார்!
– புங்குடுதீவு

முத்தமிழும் இங்கு ஒலிக்கின்றது
முந்தைய நினைவு தன்னை மீட்கின்றது
ஒன்று திரண்டு நாம் நடத்திடுவோம்
ஒவ்வொரு வருடமும் தொடர்ந்திடுவோம்!
– புங்குடுதீவு


புங்குடுதீவு தாய்
உங்களை வரவேற்கிறாள்
புங்குடுதீவு தாய்
பூவரசம் பொழுது
2014

சங்கத்தலைவரின் எண்ணத்திலிருந்து

"விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை"
"எண்ணியவன் உறங்கினாலும் எண்ணங்கள் உறங்குவதில்லை"

என்ற வாக்கினை சிரமேற்கொண்டு தாய் நிலத்தின் மேல் காதல் கொண்டு அதனூடே அவாவுடன் இணைந்திருக்கின்றது கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம். மொட்டாய் அரும்பி பூவாய் மலர்ந்து பற்பல அதியுயர் பணிகளை மகரந்தமாய் அள்ளி வீசி மக்களின் நெஞ்சங்கஎில் மறையாத மாறாத மாணிக்கமாய் திகழ்கின்றது. அந்தவகையில் அம்மலரிலே யானும் ஓர் இதழாய் இருந்து என் ஆசிச்செய்தியை மகரந்தமாய் செப்புகின்றேன்.

மக்களின் வாழ்க்கை செம்மையாகவும் சிறப்பாகவும் அமைவதற்கு கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் ஆற்றும் பணிகள் உண்மையில் வியக்கத்தக்கது. நாடி தேடி வருவோரையும், நலிந்து வருவோரையும் இரக்கங் காட்டி இன்னல் துடைத்து தன் உற்ற நண்பன் போல் பிரதியுபகாரம் பாராது தன்னலம் எதுவுமின்றி பணிகள் ஆற்றிவருவது என்றும் பெருமைக்குரிய விடயமாகும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு விதவைக்குடும்பங்கள் பெண் தலைமைக்குடும்பங்கள் என அனைத்து குடும்பங்களுக்கும் தலைவனாய் வீற்றிருந்து அவர்களின் தேவையை சிறப்போடு பூர்த்தி செய்கிறது. இப்பணியானது என்றென்றும் தொடர என் நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மானிடராய் உலகில் காலடி வைத்த ஒவ்வொருவரும் மனதளவில் ஒரு குறுகிய எல்லையை கட்டிக்கொண்டு தனக்காகவும் தன்னுடைய குடும்பத்தினருக்காகவும் மட்டுமே சிந்திக்கின்றனர். சிலர் மட்டும் தன்னையும் தனது குடும்பத்தையும் தாண்டி ஊர் உலகமென அறிவை விரித்து சிந்திக்கின்றனர். அத்தகையவர்களின் தியாகத்தால்தான் இந்த உலக சமுதாயம் மேன்மை பெற்று வாழ்ந்து வருகின்றது. அவ்வழியில் பயணிப்பவர்கள்தான் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் என்று கூறிக்கொண்டால் அது மிகையாகாது.

பனைசாரலையும் பனை வளத்தையும் அருகிப்போகாது பெருமைப்படுத்தும் முகமாக அதனை இன்று வரை மறக்காது அதிலே வெற்றிக்கேடயம், இலட்சனை என்பவற்றை செய்து கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்திற்கு கொடுத்து பெருமைப்படுத்துகின்றது எம் தாய் நிலம். அப்பெருமைகளை உற்ற தோழன் போல் தோள் கொடுத்து தாய் நிலத்தை பெருமையடையச் செய்ய அயராது பணிபுரிகின்ற கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் என்றென்றும் வாழி.

ஆவினங்களின் தாகங்களை தீர்க்கும் பொருட்டு தொட்டிகளுக்கு நீர் நிரப்பி இன்றுவரை நீர் ஊற்றிக்கொண்டிருக்கின்றது. அந்நீர் புங்கை மக்களின் நெஞ்சங்களில் நீர் ஊற்றாய் என்றுமே ஊறிக்கொண்டிருக்கும். அத்துடன் கிராமத்தில் வீதிதிருத்தல் மயானத்திருத்தம், ஆலய வீதித்துப்பரவு மாணவர் கல்விக்கான ஊக்குவிப்பு, சுகாதார மேம்பாட்டு திட்டங்கள் நலிவுற்ற குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றையும் செய்து வருகின்றது கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்.

எத்தனை எத்தனை பணிகள் அத்தனையும் சொல்லிட என் ஏடு போதாது. கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் பணிகளைக் கண்டு உயிரற்ற சிலைகளும் எழுந்து மக்களோடு பேசுகின்றது. இதன் பணிகள் சேவைகள் என்றென்றும் மண்ணில் மறையாது தொடர்ந்து தென்றலாய் வீசினால் நாளை உலகில் அதன் பணிகள் தெவிட்டாத தீங்கனியாய் எல்லோர் உள்ளங்களிலும் தித்திக்கும் என்பதில் சிறதளவும் ஐயமில்லை.

நன்றி



குமார் தில்லைநாதன்
தலைவர்
கனடா–புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

புத்துணர்வோடு பூவரசம்பொழுது விழாக்காண வந்திருக்கும் எமது உறவுகளே...

கனடா-புங்குடுதீவு பழையமாணவர்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பத்தொன்பதாம் ஆண்டைத் தொட்டு நிற்பதை அறிந்திட உள்ளம் மகிழ்கிறது. சங்க அங்குரார்ப்பண நிகழ்வின் போது என்னோடு உடனிருந்து பங்கு கொண்ட அன்பு நண்பர்கள், அங்கு திரண்டு வந்து ஆர்வத்துடன் பங்கு கொண்ட எமது ஊரின் உறவுகளின் முகங்கள் இன்றும் எம் கண்முன்னே தெரிகிறது. வளமும், புகழும் கொண்ட பூமியாய் திகழ்ந்த எமது அன்னை பூமியைப்பிரிந்து நாம் வாழ்ந்தாலும் புலம்பெயர் எம் தாய்உறவுகளினை மறவாது எமது அடையாளங்களைத் தொலைத்துவிடாது எல்லோரையும் இணைத்து வைக்கும் பாலமாக இன்று கனடா-புங்குடுதீவு பழையமாண-வர்சங்கம் விளங்கிவருகிறது.

"பூவரசம்பொழுது" என்றால் புங்குடுதீவு மக்களால் நடாத்தப்படும்விழா என்றே எல்லா ஊர்மக்களாலும் வியந்து பேசப்படும் விழாவாகத்திகழ்ந்து வருகிறது. சங்கம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை தலைவர்களாயும் மற்றும் செயலாளர், நிர்வாகசபை உறுப்பினர்களர்களகவும் இருந்து அளப்பெரும் பணியாற்றிய அனைத்து அன்புள்ளங்களையும் நன்றியுணர்வோடு பாராட்டி மகிழ்கிறேன். எந்த மக்களின் துயர்-துடைப்பதற்காக சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த மக்களின் கல்வி,சுகாதாரம், குடிநீர், உணவு போன்ற பணிகளை போர்க்காலத்திலிருந்து இன்றுவரை சிறப்பாக செய்து வருவதோடு எமது ஊர்தவிர்ந்த ஏனைய பிரதேச மக்களின் துயர்துடைப்பிலும் நிறைவாகப்பங்கு கொண்டுள்ளது. இத்தகைய அளப்பெரும் பணிகளை ஆற்றுவதற்கு எமது மண்ணின் உறவுகளும், வர்த்தக அன்பு நெஞ்சங்களும் ஒன்றுகூடல், பூவரசம்பொழுது நிகழ்வுகள் மூலம் அளித்துவரும் பெருநிதி தான் காரணம் என்பதனையும் இவர்களை என்றும் நன்றியுணர்வோடு நினைந்து கொள்கிறோம்.

கடந்த கால்நூற்றாண்டுக்கு முன்னர் நிறைந்த வளமோடும், கல்வி சிறப்போடும் மக்கள் செறிவோடும் திகழ்ந்த எமது அன்றைய பூமியை மீண்டும் வளம் கொண்ட பூமியாய் கட்டியெழுப்பும் தார்மீக கடமை புலம்பெயர் தேசங்களில் புங்குடுதீவு மண்ணின் பெயரால் இயங்கிவரும் அமைப்புக்களிடம் ஒப்படைக்க-ப்பட்டுள்ளது. எனவே இந்தப்பணியில் கனடா,இலண்டன், யேர்மனி,சுவிஸ்,பிரான்ஸ்போன்ற இடகளில் இயங்கும் அமைப்புக்கள் தங்கள் தாயகம் நோக்கிய பணியை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றன. ஏனைய நாடுகளிலுள்ள அமைப்புகளும் இதில் ஈடுபடவேண்டுமென அன்போடு கேட்டுக்கொண்டு எமது மண்ணில் புகழ்பூத்த இரத்தினபுரி வர்த்தகர் அமரர் வேலாயுதபிள்ளை அவர்களின் அருமைப்புதல்வர் கொழும்பு மாநகரின் சிரேஸ்ட வழக்கறிஞர் என் அன்புக்குரிய K.V. தவராஜா அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்து கொ-ாள்ள கனடா வருவது மேலும் சிறப்பைத்தருகிறது. நிறைந்த ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டவரும் ஊரின் மீது தளராத பற்றுக்கொண்ட துடிப்பு மிக்க இளைஞர் தம்பி குமார்தில்லைநாதன் அவர்கள் தலைமையில் 2014ஆம் ஆண்டின் "பூவரசம்பொழுதுவிழா" மலர்வது எங்கள் எல்லோருக்கும் மகிழ்வைத்தருகிறது.

வருடாவருடம் இடம்பெற்றுவரும் பூவரசம்பொழுது விழாக்காண திரண்டு வந்திருக்கும் அனைவரையும் அன்புள்ளங்கொண்டு வரவேற்று புத்தம்புதிய மலராய் பூத்துக்குலுங்கும் பூவரசம்பொழுதினைக்கண்டு மகிழ்வோம்.

"நாடும் மொழியும்
நமதிரு கண்கள்"



சோம சச்சிதானந்தன்
செயலாளர்
கனடா–புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்.

ஊரின் உறவுகளுக்கு வணக்கம்

2014 பூவரசம் பொழுது விழா மலரின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்வடைகிறேன். உறவுகளே!

வரலாற்றின் வழித்தடத்தில் தாய்நிலம் நீங்கும் துயரைக் காலம் எம்மினத்தின் கைகளில் தந்தது. துயரைத் தாங்கியபடி உலகத்து வீதிகளில் உதவி தேடித் திரிந்தோம். மொழி, பண்பாடு இரண்டாலும் வேறுபட்ட பனி நிலங்களில் எங்கள் பாதத்தை ஊன்றி ஊன்றி இன்று நிமிர்ந்து நிற்கின்றோம்.
இந்நிமிர்வுக் எமக்கு உரமாய் நின்றவை எமது ஊர் சார்ந்த நினைவும் அங்கு எமக்காய் காத்திருக்கும் உறவுகளுமே. எமது நாடு, எமது மொழி, தேசியம், பண்பாடு, விடுதலை என்கின்ற வேர்களிலேயே எமது இருப்பு அமைகின்றது.

ஒரு தந்தை தனது சிறுவயதில் தனக்குக் கிடைக்காததை, எப்படித் தனது பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுவானோ, அவ்வாறுதான் நாமும் எமதூருக்கு நாம் வாழும் காலத்தில் அவ்வாறு கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆசைப்படுகின்றோம். அதன் விழைவே உலகின் எந்த நாடுகளில் நாம் வாழ்ந்தாலும் அங்கு எமது ஊருக்காகச் சங்கம் நிறுவி ஊரின் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஊருக்காய், மக்களுக்காய், உழைக்கும் தொண்டர்களின் சேவையினால்தான் எமது சங்கம் வளர்கிறது. வாழ்கிறது. மக்களுக்கான கடமையிலிருந்து அது எப்போதும் மாறாது. எமது தாயக உறவுகளுக்குப் புரியும் உதவிகள் என்பன எமது மண்ணின் உறவுகளினதும் வணிகப் புரவலரின் அளப்பரிய பங்களிப்பாலேயே செய்ய முடிகிறது. இச்சங்கமானது எமது ஊருக்கு மட்டுமின்றி எமது நாட்டில் ஏற்படும் அழிவுகளின் போதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தனது உதவிக் கரங்களை நீட்டியுள்ளது என்பதைப் பெருமையாக இங்கு பதிவு செய்ய விரும்புகின்றோம்.

நாம் பிறந்த மண்ணின் காற்றை, கடற்கரையை, எம்மைத் தாலாட்டி உறங்க வைத்த தாய்மாரின் தமிழை எமக்கடுத்து வரும் தலைமுறையிடம் கையளிக்க வேண்டும். என் தாயின் நாடு, என் தந்தையின் ஊர், நெடுந் தலைமுறையின் வாழ்வான மொழி என்று பெருமைப்படும் வகையில் அவர்களை வளர்த்தெடுத்து, இனிவரும் காலங்களில் இச்சங்கத்தை அவர்களிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் தலைமையேற்று நடத்த வழிகாட்ட வேண்டும். எமது தாயக மக்களுக்கான இப்பணியை நாம் வாழும் காலத்தில் மட்டும் இல்லாமல் எமது அடுத்த சந்ததிகளுக்கும் எடுத்துச் செல்வோம் என்று இந்த இடத்தில் உறுதி எடுத்துக் கொள்வோம். கலை, இலக்கியம், வீரம், கொடை, பண்பாடு, நாகரிகம் என்பனவற்றில் மேம்பட்டு இருந்த நாம் இன்று மேனாட்டு மோகத்தில் மூழ்கிக் கிடக்கின்றோம். கடந்து வந்த பாதைகளை திரும்பிக் பார்க்காமல் இருப்பது எமக்கான குழியை நாமே தோண்டுவது போலாகும். வரலாறு என்பது வட்டமே. காலச்சக்கரம் சுழலும்.

இழந்த பெருமைகள் மீளும். இழந்த உரிமைகளும் என்ற நம்பிக்கையோடு உங்களோடு நானும்.



வில்வமோகன்
பொருளாளர்
கனடா–புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்.

மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்

றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO


வாழ்த்துரை

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் 19வது ஆண்டு பூவரசம்பொழுது கனடா வாழ் புங்குடுதீவு மக்களின் ஒன்றிணைவுடன் சிறப்பாக நடைபெறுகிறது. எம்மண்ணின் மக்களின் கலைப்படைப்புகளை வெளிக்கொணர்வதிலும், எம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் பிறந்த மண்ணின் பெருமைகளையும், சிறப்புகளையும், ஊரின் வரலாற்றினையும் தெரியப்படுத்தி மனதில் பதிய வைத்து அவர்களுக்கு எம்மண்ணின் மேல் பற்றுதலை ஏற்படுத்துவதற்காகவும் இவ்விழாவினை நடாத்துகின்றோம்.

புலம் பெயர்ந்து வாழும் கற்றுணர்ந்த பலதுறை நிபுணர்களாக, பலதிறமைகள் கொண்ட எம்மண்ணின் மைந்தர்களின் அறிவுத்திறனையும், பொருளாதார வளத்தினையும் பயன்படுத்தி மீண்டும் எம்மண் அறிவிலும், ஆற்றலிலும், கலையுணர்விலும், தமிழ்மொழி உணர்விலும், சமயநெறி வாழ்விலும், வர்த்தகத் துறையிலும், விவசாயத்துறையிலும், சமூக நல்வாழ்விலும், வளம்நிறைந்த, பசுமைநிறைந்த ஊராகப் புங்குடுதீவு கிராமத்தை உருவாக்க ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம் எனும் குறிக்கோளுடன் எம் ஊரின் மக்கள் யாவரும் ஒன்றுகூடி விழா எடுத்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எமது ஊரை வளமான, செழிப்பான ஊராக மாற்றவேண்டும் எனும் நற்சிந்தனை அனைத்து நாடுகளிலும் வாழும் இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளமை வரவேற்கவேண்டிய விடயமாகும். எமது ஊரில் முக்கியமாக நன்னீர்த் தேக்கங்களை உருவாக்க வேண்டும், மழைநீர் கடலுக்குச் செல்வதைத் தடுக்க வேண்டும், பசுமை நிறைந்த பயன்தரும் மரங்கள் வளர்க்கப்படவேண்டும், தோட்டச்செய்கை, கமத்தொழில் என்பன மீண்டும் செழிப்புற வேண்டும், பழைய நீர்த்தேக்கங்கள், வீதிகள் யாவும் புனரமைக்கப்பட வேண்டும், கால்நடை வளர்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும், கல்வித்திறன் மேம்படுத்தப்படவேண்டும், அறிவில் சிறந்த கல்விமான்கள், தமிழறிஞர்கள், சமயப்பெரியோர்கள், கலைஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உருவாக வகை செய்தல் வேண்டும். அத்தோடு முக்கியமாக மதமாற்றங்கள் தடுக்கப்பட வேண்டும், கலாச்சார சீரழிவுகள், தீயபழக்கங்களுக்கு அடிமையாதலை முற்றாக ஒழிப்பதற்கான சமூக சீர்திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ள அனைவருமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சில முன்னேற்றகரமான பணிகளை வரவேற்பதுடன் அவற்றிற்கு தடை ஏற்படுத்தாது சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவையாவும்தான் 19ம் ஆண்டு பூவரசம் பொழுது விழாவில் நாம் ஒன்றுகூடி காலத்தின் தேவை கருதி எம்மண்ணிற்குச் செய்ய வேண்டிய கடமைகளாகத் தீர்மானம் எடுக்க வேண்டிய நற்பணிகளாகும்.



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
புங்குடுதீவு, கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ஆலயமுதல்வர், பிரதமகுரு
றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ஆலயஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 KENNEDY RD., UNIT-10, SCARBOROUGH, ON M1V 1S3 CANADA. TEL: 416.291.8500, WEB: WWW.VINAAYAGAR.COM

House of Commons



Rathika Sitsabaiesan
Member of Parliament
Scarborough-Rouge River

20 December 2014

A Personal Message from MP Rathika Sitsabaiesan

Dear Friends,

It is my pleasure to extend my warmest greetings to the attendees of the "Poovarasam Pozhuthu" event hosted by the Pungudutivu Old Students' Association - Canada.

For the past 19 years the Pungudutivu Old Students' Association – Canada has been hosting their annual cultural event. With hosting events such as the "Poovarasam Pozhuthu" yearly, the Pungudutivu Old Students' Association – Canada has allowed those who were originally from the island of Pungudutivu with an opportunity to meet with other members of their community. The Pungudutivu Old Students' Association – Canada has been committed to provide Canadians with an opportunity to learn more about the history of their ancestors.

As a non-profit organization, the Pungudutivu Old Students' Association – Canada has taught many about the importance of connecting with members from their own community and about the importance of gaining knowledge about their homeland.

On this special day of celebration, I would like to thank the entire team at the Pungudutivu Old Students' Association – Canada. I know and understand that it takes strong determination to be able to bring forth such a vibrant cultural event celebration. Thank you to the Pungudutivu Old Students' Association – Canada team for the successful organization of tonight's annual cultural event "Poovarasam Pozhuthu." I wish everyone part of Pungudutivu Old Students' Association – Canada with the greatest success for the many years to come.

Sincerely,

R. Sitsabaiesan MP

Rathika Sitsabaiesan, Member of Parliament
Scarborough-Rouge River

House of Commons
140 Confederation Building
House of Commons
Ottawa ON
K1A 0A6
Tel: 613-996-9681
Fax: 613-996-6643

Constituency
8130 Sheppard Ave. E,
Suite 104
Toronto, ON
M1B 3W3

MARKHAM



Logan Kanapathi
Councillor, Ward 7

December 20, 2014

GREETINGS FROM MARKHAM

On behalf of the Mayor and Members of Council, I am very pleased to extend my best wishes and greetings to the **Pungudutivu Old Students' Association of Canada,** on the occasion of the 19th Annual Cultural Show **"Poovarasam Pozhuthu"** on December 20, 2014.

As a Councillor of Markham, the most ethnically diverse community in all of Canada, working towards building sustainable communities, I applaud each and every one of your consistent efforts in coming together as an organization to connect and strengthen the community through social and cultural events in Canada like this event "Poovarasam Pozhuthu". I have thoroughly enjoyedhe show in the past many years and look forward for many successful cultural shows like this that not only showcase our rich culture but encourage children and youth to learn various art forms that are so unique to Tamil culture.

Strong moral values and rich culture are essential to build sustainable communities. Our traditional values have taught us strong moral values which shape our identity. I'm confident that our Tamil heritage will successfully pass on to the next generation through your organization's leadership in preserving our values and rich Tamil heritage.

I wish you continued success in all your future endeavours as your organization continues to grow and contribute to the beautiful diversity of our country.

Sincerely,

Logan Kanapathi
Councillor Ward 7

The Corporation of the City of Markham · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca

புங்குடுதீவு நலன்புரிச்சங்கம் பிரித்தானியா

தலைவரின் வாழ்த்துச் செய்திகள்.

அன்பான கடல்கடந்து வாழும் எமது உறவுகளுக்கு மனம் கனிந்த மாலை வணங்கங்கள். நான் உங்களுக்கு அடுக்கு வசனத்தில் வாழ்த்தவில்லை எமது தாயக பற்றுள்ள மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் பாலமாக புங்குடுதீவு நலன்புரிச்சங்கத்தை பார்க்கிறேன்.

எங்களிடம் உள்ள இளைஞர்களும் இளம் யுவதிகளும் பல அறிவுசார் தொழில்நுட்ப அறிவுடனும் தொழில் அனுபவுத்துடனும் இருக்கிறார்கள்.

காலத்தின் கட்டாயம் நாங்கள் எல்லோரும் ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணைவதே உசிதமானது. உங்கள் **"பூவரசம் பொழுது"** இனிதே நிறைவுபெற எனது வாழ்த்துக்கள்

இப்படிக்கு

அ. ஸ்ரீதரன்

அம்பலவானர் ஸ்ரீதரன்
தலைவர்
புங்குடுதீவு நலன்புரிச்கங்கம் பிரித்தானியக் கிளை

பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்"

இலங்கைத்தீவின் சிரசு போன்று அமைந்த யாழ் குடாநாட்டில் தனித்துவமாக விளங்குவது தீவகமாகும் விடாமுயற்சி, தீவிர உழைப்பு, தொழில் பக்தி, பற்றுதியான செயல்பாடு, ஆகியவற்றில் முன்னின்று அதன் மூலம் தம்மையும் தமது சமூகத்தையும் தமது இனத்தையும் வளர்த்துக் கொண்டவர்கள் தீவக மக்கள் என்ற பெருமை என்றும் உண்டு. அவர்களது தெய்வீக வாழ்வும், தொண்டுள்ளமும், பண்பாட்டு விழுமியங்கள் மீதான பற்றும், சமூக வாழ்வியல் முறைகள் மீதான பிடிப்பும் வியந்து போற்றப்படுவன.

இத்தகைய தீவக மக்களின் சீரிய வாழ்வில் நமது புங்குடுதீவு முக்கிய இடம் வகிக்கின்றது புங்குடுதீவு என்ற மூல விருட்சத்தில் தோன்றிய பல்லாயிரம் சந்ததியினர் இன்று உலகெங்கும் பூமிப்பந்தின் மூலை முடுக்கெங்கும் விழுது விட்டு கிளை பரப்பி தழைத்தோங்கி நிற்கின்றார்கள்.

புலம் பெயர்ந்து அவனி எங்கும் வேருன்றி தேசங்கள் தோறும் பரந்துபட்டு வாழும் நம் ஊர் மக்கள் தங்கள் மூலமையமான புங்குடுதீவை மறவாது அதன் தொப்புள் கொடி இணைப்பை உளமாறப் போற்றிப் பேணி மகிழ்கின்றார்கள். தாம் வாழும் தேசம் எங்கும் தமது தாய் மண்ணின் பெயரில் ஒன்றுகூடி, சங்கம் அமைத்து, கலை, கலாச்சாரம் பேணி, தம்தாய்த் தமிழை வளர்த்து, பெருமைப்படுவதோடு தம் ஊருக்கும் உகந்தவற்றை ஆற்றி வருகின்றார்கள் அவ்வகையில் கனடாவில் வாழும் நம் தாய் மண்ணின் விழுதுகளும் ஒன்றுகூடி "புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்" அமைத்து அரும் பணி ஆற்றி பெரும் புகழ் பெற்று வருகி-ன்றனர் தாய் மண்ணின் மணம் கமழ ஆண்டு தோறும் கிராமிய வாசம் வீசும் "பூவரசம்பொழுது" என்ற கலை நிகழ்வையும் அவர்கள் சிறப்புற அரங்கேற்றி வருவது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தோம்.

பத்தொன்பதாவது வருடமாக இப்போது நிகழும் பூவரசம் பொழுது -2014 நிகழ்வில் பிரதம விருந்-தினராக கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு அந்த மண்ணின் மைந்தன் என்ற வகையில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். வரலாற்றில் முன்னெப்போதும் இருந்திராத புதிரான ஓர் இக்கட்டான அரசியல் சூழலிலே நமது தாயகம் சிக்குண்டு இருக்கும் சமயத்தில் நாம் இன்று இங்கு ஒன்று கூடுகின்றோம். இலங்கையில் நம்தமிழர் தாயகம் வெறும் வெளிப் பூச்சான உள்கட்டுமான வசதிகளை மட்டும் பெற்றுக் கொ-ண்டு மறுபுறத்தில் பூகோள மயப்படுத்தல் போக்கிலும் தென்னிலங்கையின் ஆக்கிரமிப்புக் கபளீகரத்திலும் சிக்குண்டு தனது இன, மத, சமூக சிறப்புக்களை தொலைத்து, அந்தரித்து நிற்கும் அபாயகரமான காலகட்டமிது.

இச் சமயத்தில் புலம் பெயர் தேசத்தில் வாழும் நம் உறவுகளின் தாயகத்து நலன் நோக்கிய பணிகளால் மட்டுமே நம்மைக் காப்பாற்றி, நமது தனித்துவத்துவச் சிறப்பைப் பேண வைக்க முடியும் என்பதுதான் யதார்த்தமென நான் நினைக்கின்றேன். அத்தகைய -பாரிய- கடப்பாட்டையும் பொறுப்பையும் சுமந்தபடி நாம் இன்று இங்கு கூடியுள்ளோம் ஊர்க் காற்று வாசமும் ஊர்க்காரர் கூடலும் வேண்டி இன்று சந்திக்கும் நாம் தாயகத்து பணிகளில் தயங்காது காட்டும் ஈடுபாட்டை மேலும் தீவிரப்படுத்த திட சங்கற்பம் கொள்வதோடு

"பூவரசம்பொழுது" மலர்ந்து மணம் வீசி பணிகனைத் தொடர
என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.



கே.வி. தவராசா
சட்டத்தரணி–கொழும்பு

வாழ்த்துச்செய்தி

கடந்த காலங்களைப் போல் இவ்வருடமும் "பூவரசம்பொழுது" 19ஆம் ஆண்டு பூப்பதில் பெருமையடைகின்றேன். எம்மூரின் அருமை,பெருமைகளினை புலம்பெயர்நாட்டிலும் அதன் மகிமை மங்காமல் பாதுகாக்கும் கனடா-புங்குடுதீவு பழையமாணவர் சங்கத்தை மனதார பாராட்டுகின்றேன்.எம்மண்ணிற்காக நீங்கள் ஆற்றும் சேவைகள், மாணவர்களை ஊக்குவித்து கல்வியூட்டும் விதம் மற்றும் எம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நீங்கள் எடுக்கும் முயற்சிகளை நான் நன்கு அறிவேன்.

இவ்வாண்டு புங்குடுதீவு பழையமாணவர்சங்கம் நடாத்திய ஒன்றுகூடலின் போது எமதூரில் இருந்த பனை வளங்களினை வைத்து "வெற்றிக்கிண்ணங்கள்" இங்கு கொடுக்கப்பட்ட செயலானது என்னை மட்டமல்ல கனடாவில் இயங்குகின்ற ஏனைய சங்கங்களினையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.முன்னேற்றகரமான இவை போன்ற பற்பல புதுமையான முயற்சிகளை எமது சங்கம் ஆற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டு இவ்வாறான தன்னலமற்ற சேவைகளினை ஆற்ற வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி.



செல்வலிங்கம் சேனாதிராசா.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"





வட இலங்கை சர்வோதயம்
NORTH CEYLON SARVODAYAM
උතුරු ලංකා සර්වෝදයම්

ஆரம்பம் :1972 பதிவு இல.: வி/டி எஸ் / எஸ் எஸ் / என் ஜீ ஓ/ 01

Estd : 1972 Regd. NO. V/DS/SS/NGO/01

பொ. ஜமுனாதேவி (அறங்காவலர்)
P. Jamunadevi (Arangkavalar)

க. புஸ்பமணி (நிலையப் பொறுப்பாளர்)
K. Pushpamani (O.I.C)

வட இலங்கை சர்வோதயத்தின் வாழ்த்துச் செய்தி

பெரிய வெட்ட வெளி, பனம் கூடல் நிறைந்த பெரும் வெளி, பரந்து விரிந்த புல்திடல். கடலைக் கிழித்துக் கொண்டு நீளும் குன்றும் குழியுமான தார்வீதி. மண்ணின் நினைவுகளை எம் மக்கள் பசுமையாய் நெஞ்சிலே சுமந்து கொண்டு வாழ்க்கைப்படத இருப்படையும் நோக்கோடு துடிப்பை வலித்தபடி அசைக்கிறார்கள். அவ்வசைவிற்கு பக்க பலமாகவும் உறுதுணையாகவும் இற்றைக்கு வரை இருந்து வருகின்ற தங்களின் பணியை எண்ணி மெய்சிலிர்க்கிறோம்.

சிதறுபட்டு வாழ்ந்தாலும் தங்களுடைய பிறந்த கிராமத்தைச் சிந்தித்து அதனை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கோடு உதிரத்தையே பாலாக்கித் தரும் அன்னையைப் போல எம் மக்களை காத்துக் கொள்கிறீர்கள்.

சிற்பியாய் இருந்த சிறார்களை நாளைய தலைவராக உருவாக்கிக் கொடுப்பதில் தங்களின் உதவிக்கரங்கள் வரவேற்கத்தக்கது. உண்மையில் எம் சிறார்கள் படித்து பல்கலை போகையில் பெற்றதாய் பெறும் மகிழ்ச்சியை விட எம் மண்ணவர்கள் பெறும் மகிழ்ச்சியே இரட்டிப்பாகும். அவ் மகிழ்ச்சிப் பாதையை உருவாக்கி அப்பாதையிலே அம் மாணவர்கள் செல்ல புங்குடுதீவு கனடா பழைய மாணவர் சங்கம் காட்டும் திசைகாட்டி என்றும் உறுதுணையானது.

தாயின் மடியில் தவழ்ந்து விளையாடி மகிழ்ந்திருந்த தாங்கள் வேரோடு பிடுங்கி வீசி எறியப்பட்டு பூமிப்பந்தின் தேசமெங்கும் சிதறி வீழ்ந்து சொந்த தேசத்தில் வாழும் நிம்மதியை இழந்த போதும், ஈர மனதுகளின் இருப்பிடமான நாடுகளில் தூரம் தூரமாய் பதியமிடப்பட்டவர்கள் சொந்த மண்ணின் சொந்தங்களைக் கண்டெடுத்து கை கோர்த்து சேவைகள் புரிகின்றமை என்றுமே நிரந்தரமாக வேண்டும்.

தாய், தந்தையரை இழந்து பரிதவிக்கும் குடும்பங்களிற்கும் தம் சொந்த உறவினைப் போல கண்ணீர் துடைத்து உதவிக்கரம் நீட்டுகின்ற உத்தம உள்ளங்கள் என்று கூறிக்கொண்டாலும் அது மிகையாகாது.

ஓர் ஆயுதத்திற்கு கிடைக்கும் மரியாதையை விட ஓர் பேனாவிற்கு கிடைத்து விடும் என்பது உண்மையே பேனா தலை குனிவதால்தான் சமுதாயம் நிமிர்கிறது. என்பது உண்மையே ஆகும். அதிலே தாங்கள் எமக்கு ஓர் பேனாவாக இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறோம்.

நீண்ட காலமாகப் பாவனை இல்லாத வீதிகளை புனரமைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றியமை. அத்தோடு பொதுக்கிணறு, குளம் போன்றவற்றை தூய்மைப் படுத்தி அதற்கென வழி சமைத்துக் கொடுத்த பெருமை தங்களையே சாரும்.

வரட்சிக் காலங்களில் ஆவினங்களின் தாகங்களைத் தீர்க்கும் பொருட்டு எமது கிராமங்களிலே அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகள் இன்றுவரை எம் மக்களோடு பேசிக் கொண்டிருப்பது எம் ஊர்மக்கள் மட்டுமன்றி மேலைத்தேய நாடுகளும் அறியும்.

ஊருணி நீர் நிறைந்தாற் போல என்பதற்கிணங்க எந்நேரமும் ஆவினங்களுக்கு நீரை ஊற்றிக் கொண்டும், அதற்கென ஓர் தொட்டி அமைத்துக் கொண்ட தங்களின் முன் உதாரணச் செயலானது ஏனைய மக்களையும் இவ்வாறான தொட்டிகளை அமைக்க தூண்டியதை இட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

அது மட்டுமன்றி புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு மின்னுபகரணங்கள், மின்குமிழ்கள், காகிதாதிகள், மருத்துவ உபகரணம் என்பவற்றை பெற்றுக் கொடுத்த பெருமை தலைதாங்கி நிற்கின்றது.

"இட்டுக் கெட்டார் எங்குமில்லை" என்பதை மக்களிடம் உணர்த்தி அவர்களின் நெஞ்சங்களில் அமுதசுரபியாகவும், அட்சயபாத்திரமாகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றன தம் பணிகள்.

இப்பணியானது மென்மேலும் தொடர எம் வாழ்த்துக்களையும், நன்றந்தமில்லாத நன்றியையும் தெரிவிப்பதோடு உங்கள் சேவையின் பயனானது ஊழிதோறுமீயாக ஒவ்வொரு மக்களின் நெஞ்சங்களிலும் துளிர் விட வேண்டும் என்பதே எமது அவா!

"வாழ்க வளமுடன்"

க. புஸ்பமணி
செல்வி.க.புஸ்பமணி
நிலையப்பொறுப்பாளர்
வடஇலங்கை சர்வோதயம்

பொ. ஜமுனாதேவி
செல்வி.பொ.ஜமுனாதேவி
அறங்காவலர்
வடஇலங்கை சர்வோதயம்

தலைமைப் பணிமனை : சர்வோதய சேவை வளாகம், புங்குடுதீவு - 03, இலங்கை.
Head Office : Sarvodaya Sevai Valakam, Pungudutivu -03, Sri Lanka.
ප්‍රධාන කාර්යාලය : සර්වෝදය සෑවයි වලාගම්, පුංගුඩුතිවු - 03. ශ්‍රී ලංකා.
Tel : 021 321 4341

யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்

යා/ පුන්කුඩුතීවු මහා විද්‍යාලයම්

J/ PUNGUDUTIVU MAHA VIDYALAYAM

Pungudutivu,
SriLanka.

Date: 10/12/2014

வாழ்த்துச் செய்தி

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் ஆண்டுதோறும் வெளியிடும் "பூவரசம் பொழுது" என்றமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முது மொழிக்கு அமைய புலம் பெயர்ந்து உலகின் பல நாடுகளில் வாழ்ந்தாலும் தாம் ஈட்டும் செல்வத்தில் பெரும் பகுதியை சொந்த மண்ணில் வாழும் உறவுகளின் உயர்வுக்காக உவந்தளித்து உளம் மகிழ்பவர்கள் நீங்கள். அதற்காக உங்களை பாராட்டுகின்றேன்.

மீண்டும் தமது ஊரைப்பார்க்கும் உறவுகளின் முகங்களிள் ஒரு ஏக்கம், கவலை இருப்பதை நான் உணர்கிறேன். நாம் இருக்கும் போது எத்தைனை அழகும், செழிப்புமிக்க ஊர் இன்று சோலை இழந்து காணப்படுவதைக் கண்டு வேதனை அடைவது புரிகிறது.
நாம் எல்லோரும் இணைந்து மீண்டும் முயற்சி செய்தால் சொர்க்கத்தை இங்கேயே கண்டு விடலாம் புங்குடுதீவு பொன் கொடு தீவாக மாற்றி விடலாம். என்றும் அழியாத செல்வமாக விளங்கும் கல்வியை வளர்த்திடலாம் அழகு மிண்டும் தோன்றி விடும்.

நவீன உலகிற்கு தேவையான கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கு உள்ளது பௌதீக வளங்கள், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், இணைபாடவிதான செயற்பாடுகள், நவீன தொழில் நுட்ப சாதானங்களை பயன்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ் செயற்பாடுகளை வலுவூட்டும் வகையில் செயல் படுத்துவதற்கு சமூகத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது அந்த வகையில் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு அமைய அனைவரும் ஒன்று பட்டு எம் மாணவர்களின் அறிவுக்கண்களை திறந்து வளமுடன் வாழவைப்போம்.

வாழ்க வளமுடன்

ச.கணேஸ்வரன்
அதிபர்
யாழ்/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்
J/PUNGUDUTIVU SRIGANESHA MAHA VIDYALAYAM

Mr.N.Nagarasa
Principal S.L.P.S 2 - II
திரு.நா.நாகராசா
அதிபர் இ.அ.சே 2 -II

PUNGUDUTIVU - 12
புங்குடுதீவு - 12

05/ 12/ 2014

மலர் பூத்து மணம் கமழ மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்

எமது நாட்டிலே இருந்து புலம் பெயர்ந்து வாழும் எமது உடன்பிறப்புக்களுக்கு எமது அன்பு கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் யாபேரும் பிறந்த மண்ணை மறவாது கூட்டுறவாகச் சேர்ந்து எமது நாட்டுயர்வுக்காகச் செய்து வரும் சேவைகளை எங்களால் இலகுவில் மறந்துவிட முடியாது. உங்கள் சேவையால் எங்கள் மாணவர்களது கல்வி வளம் பெருகுகின்றது. உங்களது சேவையானது மென்மேலும் சிறக்க பாடசாலைச் சமூகமாகிய நாங்கள் உங்களை மனதார வாழ்த்துகின்றோம்.

புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம் கனடா இவ்வாண்டு 19 ஆவது பூவரசம் பொழுது மலரை வெளியிடுவதை இட்டு மிகவும் மகிழ்வடைகின்றோம். பூவரசம் பொழுது விழாச் சிறக்கவும் ஆண்டு மலர் பூத்து மணம் கமழவும் மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்.

N. Nagarasa

N. NAGARASA
PRINCIPAL
J/PUNGUDUTIVU SRIGANESHA M.V.
PUNGUDUTIVU.

யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்
J/PUNGUDUTIVU RAJARAJESWARY TAMIL MIXED VIDYALAYAM
10ம் வட்டாரம்,
புங்குடுதீவு
Ward No. 10,
Pungudutivu.

24.11.2014

விடிந்தொளி பரப்பு

தூரச் சென்றிருந்தும் வேரூன்றி நின்ற நன்றி உணர்க்கு ஆண்டும் அன்பு, மூவாறு அகவை தாண்டும் உங்கள் 'பூவரசம் பொழுது' புங்கை மண்ணிற்கு மீண்டும் ஒரு விடியல் தரும்.

வெல்லற்கரிதான நெருக்கடித்தோர் வாழ்ந்த பொன்னகமாம் புங்குடுதீவின் வளர்ச்சிக்காய் பாடுபடும் உங்களுக்கே தெய்வமும் ஆசிதரும். தாழ்ந்திருந்து பாழுண்ட மதுவையே மறக்கும் இக்காலத்தில் பிறந்த மண்ணுறவாச் செம்மல்கள் நீங்கள். உங்களின் வள்ளன்மையால் பொலிவுறும் ஆலயங்களும், கவினுறும் கல்விக் கூடங்களும், தாகம் தணிப்புச் சேவைகளும் வெளிப்படைச் சான்றுகள். தோன்றாத் துணைகளாய் இன்னும் பல என்றறிகின்றோம்.

எமது பாடசாலையின் பக்கமும் உங்கள் இரத்தை உண்டென்பதில் சிறார்களுடன் எமக்கும் மகிழ்ச்சியே. 2013 ஜனவரியில் மீளாரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இதுவரையில் உங்கள் உதவிகள் ஏதும் பெறவில்லை என்பதில் துளியும் கவலையில்லை ஏனெனில் உங்களின் அக்கறையில் எதிர்கால நம்பிக்கை எமக்குப் பூரணமாகவுள்ளது.

எமது பாடசாலையில் பயிலும் மாணவர்களினதும் பாடசாலையினதும் தேவைப்பாடுகள் ஏலவே பல வழிகளிலும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. என்றவகையில் ஆதங்கம் மட்டுமே எமக்குள்ளது.

வாழ வேண்டும் என்ற ஏக்கம் எமது பிள்ளைகளுக்கும்
வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கும் உள்ளவரை
எமது ஐயம் வீணானதே என்றுணர்கின்றேன்.

சீதம் தாண்டி அகவை மலர 'பூவரசம் பொழுதுகள்'
புங்குடுதீவிற்காய் தொடர்ந்து விடிய கண்ணகை அருள் புரிவாள்.

"குழந்தவரை விரைந்து
விடிந்தொளி பரப்பு
பூவரசம் பொழுதே"

K.Shritharan
Principal
J/Pungudutivu Rasarajeswary T.M.Vidyalayam
Pungudutivu

யா/புங்குடுதீவு மேற்கு
அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் வித்தியாலயம்

J/PUNGUDUTIVU WEST
AMERICAN MISSION TAMIL MIXED VIDYALAYAM

புங்குடுதீவு 03,
இலங்கை

SchoolNo:1014010

Pungudutivu 03,
Sri lanka

Date: 26 .11./2014..

"பூவரசம் பொழுது" மலருக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள்

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற வாக்கிற்கமைய மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பிறருக்கு உதவி செய்கின்ற மனம் வேண்டும். செய்கின்ற உதவி சிறிதாக இருந்தாலும் அது காலமறிந்து செய்யவேண்டும். அவ்உதவியானது இந்த உலகைவிடப் பெரிய தியாகச் செயலாகும். அந்தவகையில் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் ஆற்றி வருகின்ற உதவியை இவ்வூர் மக்கள் என்றுமே மறக்கமுடியாது.

சிறந்த சமூகம் உருவாகவேண்டுமென்றால் அச்சமூகத்திற்கு சிறந்த கல்வி வழங்கவேண்டும். கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையை வழங்குவது பாராட்டுவதற்குரியதாகும். இங்குள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அவர்கள் வழங்கும் உதவிகளை எண்ணும் போது பேருவகையடைகின்றேன்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் தனி சிறந்தனவே"

என்பதற்கமைய தாய்மண்ணின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றுதலை எண்ணி வியக்கின்றேன். கனடா – புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினால் வருடா வருடம் பூவரசம் பொழுது என்னும் நூல் வெளியீடானது பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கின்ற போற்றித் துதிக்கின்ற ஒரு வெளியீடு என்றால் அது மிகையாகாது. எங்கு வாழ்ந்தாலும் விடுகின்ற மூச்சு ஒவ்வொன்றிலும் எமது தாய் மண்ணை வளர்ச்சி பெறச் செய்யவேண்டுமென்ற பெருமித உணர்வு மேலோங்கி இருப்பதனை நாம் வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையிலே கனடா – புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினால் வெளிவரும் 19வது வெளியீடான "பூவரசம் பொழுது" என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பேருவகை அடைகின்றேன்.

தாய் மண்ணின் நலன் காக்கும் தலைமைகளுக்கும் பக்கபலமாக இருந்து உதவியும், ஆலோசனைகளையும் வழங்கி வரும் கனடா – புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரையும், அதன் அங்கத்தவர்களையும், புங்குடுதீவு மண்ணின் மைந்தர்களையும் வாழ்க பல்லாண்டு வளர்க உம்பணி என பெருங்காடு ஸ்ரீமுத்துமாரியம்மன் பாதம் பணிந்து மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்!

Y. Vina...

Mrs. Y. Vinayagamoorthy
Principal
J/Pungudutivu West American Mission Tamil Mixed Vidyalayam
Pungudutivu.

யா/புங்குடுதீவு சேர்.துரைசுவாமி வித்தியாலயம்

J/PUNGUDUTHIVU SIR.DURAISUVAMI VIDYALAYAM

4ம் வட்டாரம், புங்குடுதீவு. Word No.4,Punguduthivu

25../11.../2014...

19வது பூவரசம் பொழுது

பட்டொளி வீசட்டும்

புலம் பெயர் சோதரராம் புங்கையூர் நாயகரின்
பூவரசம் பொழுது புதுமையுடன் திகழ வாழ்த்துகின்றேன்.
மக்கள் சேவையே மகத்தான சேவையென
மாண்புடன் சேவை செய்து மனமது மகிழ்கின்றான்
தாய்மண் பாசமும் தமிழ் உறவின் பற்றும்
தரணியில் நிலைத்திட நான் மனமார வாழ்த்துகின்றேன்.

புங்குடுதீவு பொன்கொழிதீவு என புலம்பெயர்ந்தோர்கள் சொன்னார்கள்
அந்நாள் அறிஞர்வாக்கு இன்றும் நிறைந்தது போல்
உங்கள் சேவை கல்விக்காய் பரவிநிற்கின்றது
கரமோயாது கொடுக்கும் கரங்களை மிக்க வள்ளல்களாய்
கல்விக்கென நீங்கள் கரம் நீட்டி உதவுகின்றீர்.
உங்கள் உள்ளத்தில் உறுதியாய் நிலைத்திருக்கும்
உறவுப் பாலம் என்றென்றும் தொடர வேண்டும்.

புங்கையூரின் பெருமைமிக்க மைந்தர்களே நீங்கள்
தொலைவினிலே வசித்தாலும் உறவுகளை மறப்பதில்லை
தூரம் இருந்தாலும் தொடரட்டும் உங்கள் பணி
தொல்லைகள் அகன்று நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்.

புங்கையூர் மண்ணின் புகழினை பறைசாற்றும்
பூவரசம் பொழுது புகழுடன் மலரட்டும்
பட்டொளி வீசி பாரெங்கும் இசைபரப்பி
திக்கெட்டும் திகழ உளமார வாழ்த்துகின்றேன்.

M. Ganeshan.

Sir Duraiswamy V

யா / புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயம்

J /Pungudutivu R. C. T. M. School

2ம் வட்டாரம், புங்குடுதீவு.

..../..../2014.

தலைவர்,

கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்,

கனடா.

வாழ்த்துச்செய்தி

கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் வருடா வருடம் வெளியிடும் "பூவரசம் பொழுது" என்னும் மலர் இவ்வாண்டு 2வது மலராக வெளிவருகின்றது. இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது ஊரில் பிறந்து கல்வி கற்று தற்போது கனடாவில் வசித்தாலும் கூட கனடாவில் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி இவ்வாறான சிறந்த செயற்பாட்டை செய்து வருவது போற்றுதற்குரியது. இது மட்டுமல்லாது எமது ஊர் மக்களின் வளர்ச்சிக்காக நீங்கள் செய்யும் சேவையை யாரும் மறந்துவிட முடியாது.

இம்மலரானது எமது ஊரைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வருகின்றது. எமது மாணவர்களின் திறமைகளை உள்நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளில் வசிப்பவர்களும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதன் மூலம் எமது மாணவர்களின் திறமைகளை அறிவித்து கல்வியில் சிறந்தோங்க வைக்க முடியும்.

எமது ஊரைச்சார்ந்த கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்படுகின்ற பூவரசம்பொழுது எனும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்க எனக்கு சந்தர்ப்பமளித்த மலர்க்குழுவிற்கு நன்றியுடன் இம்மலர் தொடர்ந்து வெளிவரவேண்டும் என இறையாசி வேண்டி இந்த மலர் வெளியீடு சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கிறேன்.

நன்றி

J. Muthuthurai

(செல்வி ஜெகநந்தினி முத்துத்துரை)

Principal

J/Pungudutivu R.C. T.M. Sch.

Pungudutivu

நன்றியுணர்வுடன், வாழ்த்துகின்றேன்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"

கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினால் 19வது இதழாக வெளியிடப்படும் பூவரசம் பொழுது-2014 நூலிற்கு எனது நன்றியுணர்வுடன், வாழ்த்துக்களினையும் தெரிவித்து நிற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நான் அண்மைக்காலமாக கனடா-புங்குடுதீவு பழையமாணவர் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பதால் அவர்களால் நடைமுறைப்படுத்திய, நடைமுறைப்படுத்துகின்ற, எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பல திட்டங்கள் எனக்கு பெருமகிழ்வினை அளிக்கின்றன.

முதலில் இச்சங்கத்தினுடைய "மாணவத்துவம்" எனும்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் மிகப்பெரும் பயனடைந்தவன் எனும் வகையில் எனது மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்து நிற்கின்றேன்.இவ்வாறாகத் தாங்கள் சங்கத்தினூடாகச் செய்கின்ற கல்விசார் உதவிகள் வறுமையுற்ற மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

புங்குடுதீவில் தற்போது வசித்து வருபவன் எனும் வகையில் நிதர்சனமாக கண்முன்னே காணக்கூடிய தங்களின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கன.குறிப்பாக குடிநீர்வசதி, சில பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகளினை வழங்கியமை, ஆநிரைகளுக்கான குடிநீர்த்தொட்டிகளினை அமைத்தமை, கிராமிய பன்னை உற்பத்திகளினை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச்சென்றமை, மாணவர்களின் கல்விக்கான ஊக்குவிப்புத் தொகைளினை வழங்குகின்றமை, அத்துடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் புங்குடுதீவு நுழைவாயில் முகப்புஅமைத்தல், புங்குடுதீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளினை மையமாகக் கொண்ட குறும்படத்தயாரிப்பு, கணனி வகுப்புக்கள் மற்றும் ஏனைய கற்பித்தல் நடவடிக்கைகள், தொழிற்பயிற்சிசார் சுயதொழிலுக்கான ஊக்குவிப்பு போன்ற திட்டங்கள் வரவேற்கத்தக்கன.

"பூவரசம் பொழுது 2014" நூலின் அட்டைப்பட வடிவமைப்பு என்னிடம் தரப்பட்டதனையிட்டு பெருமகிழ்டைகின்றேன். "ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம" எனும் தாரகமந்திரத்தினைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டுவரும் தங்கள் சங்கத்தினால் செய்துவருகின்ற இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் எம்மண்ணில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு புங்குடுதீவு வாழ் உறவுகளினது குறிப்பாக இளைஞர்களினது ஒத்துழைப்பு என்றும் இருக்குமென்றும் கூறி இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு பூவரசம் பொழுது தொடர்ந்தும் வெளிவரவும் உங்கள் பணியும், செயற்பாடுகளும் மென்மேலும் வளரவும், சிறப்புறவும், தொடரவும் வாழ்த்துகின்றேன்.

நன்றி



அன்புடன்
ஞா.கிறிஸ்ரியுவராஜ்


747 AUTOPARTS
The Right Price; The Right Choice
COMING SOON
AJEX &
SCARBOROUGH
NISSAN
Scan Me
Tel: 905-471-4447 | Tel: 905-294-5773
Unit 14 15 Heritage Road, Markham, ON, L3P 0C2
Unit 5 7025 Markham Road, Markham, ON, L3P 0C2

மலரினுள்...

இவ்வாண்டின் "பூவரசம்பொழுதின்" இனிய மாலைப்பொழுதில் மலர்ந்திடும் மலர் எமது கிராமத்தின் "கல்விநிலை அன்றும்,இன்றும்" பேராசிரியர் கா.குக-பாலன் அவர்கள் ஆக்கத்தில் இதமான நறுமணத்துடன் இவ்வாண்டு புலருகி-றது. பூவரசம்பொழுதுகளின் பயன் அந்த பொழுதோடு போய்விடுவதில்லை. பூவரசம்பொழுதுகள் புங்குடுதீவு மாணவர்களின் நலம் நாடிப்புலர்கிறது. இங்கு கலைவிழா தருவது "அங்குநம்" மாணவர்களின் கல்வி எதிர்காலம் நல்ல படி புலர்வதற்கான நற்பணியிலும் புனர்நிர்மாணப்பணியிலும் விசாலித்திருக்கிறது.
உங்கள் முன் சுடர்விட்டுப்பிரகாசித்துக் கொண்டிருக்கும் நூல் எம்மண்ணின் கல்விநிலை உயர்ந்த கல்விப்பாரம்பரியத்தை கொண்டு இடைநிலைவகுப்பு வரையும் கல்வியோடு பல செயற்பாட்டுத்திட்டங்களினையும் முன்னெடுத்து கற்பிக்கும் முறைகள் பலவும் இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக்கலைகளையும், உயிரியல், உளவியல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு வெளிவருகிறது.
எம்மண்ணின் கல்விநிலை பற்றியும், பேராசிரியர்கள், பிரதமவிருந்தினர்கள், பாடசாலை அதிபர்கள், எமது மண்ணின் பெயரால் உலகமெல்லாம் இயங்கும் ஒன்றியங்களின் வாழ்த்துச்செய்திகள், மாணவச்செல்வங்களின் மகிமைகள், மாணவர்களுக்கான எதிர்கால உதவித்திட்டங்கள், எமது சங்கத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் பெறுவோர் விபரம், இவ்வாண்டின் ஒன்றுகூடல் நிகழ்வுகளின் நிழல்களும் இங்கு நடைபெற்ற நி-கழ்வுகளும், பதிவுகளும் ஊரின் நிகழ்வுகளின் நிழற்பதிவுகள், ஒன்றுகூடல் ஞாபகார்த்த அன்பளிப்பு வழங்கியோர், இவ்வாண்டு கனேடிய மண்ணில் உயிர்நீத்த எம் உறவுகள் இவை அனைத்தையும் உள்வாங்கி உங்கள் கரங்களில் தவழவுள்ளது.
இந்நூலின் மூலம் எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சி அன்றும்,இன்றும் எவ்வாறு இருந்தது, இருக்கின்றது என்பதனை இளம்சந்ததியினர் சிந்திக்கவும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மக்கள் ஊரின் கல்வி வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எம் உறவுகளுக்கு எவ்வாறு உதவலாம் என சிந்திக்க வைப்பதற்காகவும் மலரினுள் நுழைவோம்.

நன்றி



குமாரமனோகரன்
கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்


ABBIRAMI
CATERING
TAKE OUT
7Days
A Week
அபிராமியின் வாழை இலை விருந்து
First Quality & Home Taste
Catering
for all Occassion
Scan Me
416-266-5372
2619 Eglinton Ave
Scarborough, ON
(Between Brimley & Midland)

புங்குடுதீவின் இளைஞர்களினை பொதுப்பணிக்கு உருவாக்கிய சிற்பி வே.க.சோமசுந்தரம்



(சமாதான நீதவான்)
முன்னாள் யாழ்மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் புங்குடுதீவு-03

உலகில் தோன்றிய மனிதஇனமானது இன்று பல நூற்றாண்டுகளைக் கடந்து விட்டதாகவே காணப்படும் இம்மண்ணில், ஒவ்வொரு மனிதனும் ஒரு விதத்தில் சமுதாயத்தில் நினைவு கூரப்படுவதுண்டு. அந்த வகையில் அன்னை, தந்தை உறவுகள், மனைவி, பிள்ளைகள் என்ற சமூகக்கட்டுப்பாடுகளையும் தாண்டி இனமத, மொழிவளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், ஆட்சியுரிமைக்காகவும் தான் தேடிய சொத்து, சுகங்களை துறந்து விடுதலை வேட்கையும், சுதந்திரதாகமும் கொண்டவராய் வாழ்ந்து மடிந்தவர் தான் அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்கள். புங்குடுதீவு மேற்கு அனுமார் கந்தையா அபிராமிப்பிள்ளை தம்பதியினருக்கு 1914ஆம் ஆண்டு சித்திரை 30ஆம் திகதி வந்து அவதரித்தார். ஆரம்பக்கல்வியினை பெருங்காடு அமெரிக்கன்மிசன் பாடசாலையிலும், உயர்கல்வியினை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார். புங்குடுதீவில் 1925ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட "இளைஞர் கழகம்" செயலிழந்து கிடந்த பொழுது அதனை பொறுப்பேற்று புதுப்பொலிவூட்டி அதன் தலைவராக இருந்து பல பெரியார்களினையும், கல்விமான்களினையும் ஒன்றுகூட்டி அரசியல், சமூகம், கலாசாரம், நிர்மாணம் ஆகிய சகல துறைகளிலும் புங்குடுதீவு இளைஞர்களினை அளப்பரிய சேவையாற்ற வைத்து கிராமமெங்கும் புதிய மன்றங்கள், கழகங்கள், சங்கங்கள் உருவாகின. கிராம இளைஞர்கள் தமது இயல்பான திறமைகளை வெளிக்கொண்டு வர வழிகாட்டி புதியதலைமுறைக்கு தலைவராகத் திகழ்ந்தார்.

அன்றைய கிராமத்து அமைதிச்சூழ்நிலையும் அவரிடம் நிறைந்திருந்த பணிவும் திடமும் இளைஞர்களின் ஆர்வமும் இளைஞர்கழகத்தினதும், தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்குதவின என்று கொள்ளலாம். அமரர் வே.க.வின் இன்னொரு அத்தியாயம் கலை, இலக்கியம், சமூகம் சார்ந்த தமிழ் கலை, கலாசார, பண்பாடுகளை பேணல் முத்தமிழ்விழா, நாடக விழா, பொங்கல்விழா, சித்திரை புதுவருடவிழா, விளையாட்டுவிழாக்கள், வருடாவருடம் இளைஞர்கழகத்தில் இடம்பெறவேண்டுமென நடைமுறையிலும் செய்து காட்டியவர். எத்தகைய துயரத்திலும், இடரிலும் சுதந்திர உணர்வுக்கு இவர் அளித்த முன்னுரிமையும், வறுமையைத்தாங்கிக் கொண்ட மனவலிமையும் எண்ணிப்பார்க்க முடியாதவையாகும். இவரை நாடிப் பல பதவிகள் வந்தும் கொள்கைப்பற்றுடன் நின்று செயல்பட்டவருக்கு. இவரின் அளப்பரிய சேவைக்கு இலங்கை அரசு 1978ஆம் ஆண்டில் "சமாதானநீதவான்" பட்டம் வழங்கியது. பின்னர் புங்குடுதீவு மக்களின் துணிவான தலைவருக்கு மதிப்பளிக்கும் முகமாக 1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராக போட்டியிட்டு ஊர்காவற்றுறை தொகுதி மக்களின் அதிகப்படியான வாக்குகளிலே தெரிவுசெய்யப்பட்டார்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டதும் வைத்தியசாலைவளவின் எல்லைகளுக்கான சுற்றுமதில், வைத்திய அதிகாரிக்கான நிரந்தரவிடுதி, புதிய உபகரணங்கள், அம்புலன்ஸ்வசதி, மருந்துக்களஞ்சியம், வைத்தியசாலைக்கான பஸ் போக்குவரத்து, மருந்துகள் பாதுகாக்கும் குளிர்சாதனக்களஞ்சியம், காசநோய், தொழுநோய், மலேரியா நோய்களுக்கான பரிசோதனைக்கூடங்களை உருவாக்கியதோடு மின் இணைப்பும் கிடைக்கப்பெற்றது. இத்தகைய அருஞ்சேவைகளுக்கெல்லாம் அவரது சொந்த பொருளாதாரமும், விடாமுயற்சியும் இருந்தது. புங்குடுதீவு மக்கள் தெரிந்திருக்காவிட்டாலும் வைத்தியசாலையில் எழுந்து நிற்கும் நிர்மாணத்திட்டங்கள் சாட்சிகூறும்.

தீவக பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களினை இடைவிடாது தொடர்பு கொண்டு காரைநகரூடாக மின்சாரத்திட்டம் துரிதவேகத்தில் கிராமத்திற்கு கிடைக்கச் செய்ததோடு இதனால் மின்வசதி மூலம் புதிய தொழில்வளங்களும் கிராமத்தில் உருவாகியதோடு, வீடுகளுக்கான மின்சாரத்தினை இலகுவாக மக்கள் பெற்றுக்கொண்டனர். நெடுந்தீவு மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கவும் நயினாதீவு யாத்திரிகர்களின் வசதி கருதியும் குறிகாட்டுவான் துறைமுகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனோடு குறிகாட்டுவான் உபதபாற்கந்தோரும் அமரர் எடுத்த முயற்சியால் 1960ஆம் ஆண்டு நிறைவேறியது. புங்குடுதீவு கிழக்கில் வல்லன், மாவுதிடல், வீராமலை, பூம்புகார் கிராமங்களூடாக பஸ்போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தியமை, மக்கள் குழுத்தலைவராகவும், பயிர்செய்கைக்குழு பொறுப்புக்களை ஏற்று விவசாயத்தினைப்பாதுகாக்கவும் உணவு உற்பத்தியினைப் பெருக்கி மண்ணை வளமாக்கவும் ,நல்லின விதைகள், நாற்றுக்களும் மக்களுக்கு வழங்கப்பட்டு வீட்டுத் தோட்டங்கள் உருவாகின.மாரிகால வெங்காயச்செய்கையால் மிகத்தரமான வெங்காயம் நடுவுத்துருத்தியின் கடல்சார்ந்த பகுதியில் விதைக்கப்பட்டு குடாநாட்டிலும் கொழும்பிலும் சந்தைப்படுத்தப்பட்டன. புங்குடுதீவு கிழக்கில் மிளகாய்த்தோட்டமும், புகையிலைத் தோட்டங்களும் பெருகின. குடும்பங்கள் வருமானங்களும் பெற்றன.பெருங்காடு கடற்கரையில் கட்டப்பட்ட தீவாளிபுலம் அணைக்கட்டும், புங்குடுதீவு மத்தியிலமைந்துள்ள கமநலசேவைநிலையமும் அமரர் ஆற்றிய கமநலச்சேவைத்திட்டங்களின் ஞாபகச்சின்னங்களாகும். அமரரின் வாழ்நாளில் மேற்கொள்ளப்பட்ட கால்நடை அபிவிருத்திதிட்டங்கள் நாய்கள், கோழிகள் ,கால்நடைகள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிச்சேவைகள், பசுமைக்கான மழைநீர்த்தேக்கங்கள், மரம்நாட்டல் இயக்கங்கள், முத்தமிழ்விழாக்கள், பொங்கல்புத்தாண்டு விழாக்கள் அனைத்தும் அவரது நன்றி நிறைந்த உள்ளத்தால், மனித நேயத்தால் விளைந்தவை. அரைநூற்றாண்டு காலம் அமரர் வே.க. சோமசுந்தரம் அவர்களின் தொடர்பில்லாத நிகழ்ச்சிகள் எதுவுமில்லை.

அமரர் அவர்கள் மறைந்து 21.12.2000ஆம் ஆண்டு பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க புங்குடுதீவு விசேட பொதுக்கூட்டத்தில் பொதுக்கூட்டப் பிரேரணைகளாக வழுக்கையாறு-குறிகாட்டுவான் தேசிய வீதியில் ஆரம்பமாகி சங்கத்தங்கேணி-வேம்படி மானெழுவம் ஊடாக மாரியம்மன் கோயில் வீதியுடன் இணையும் கிராமத்தின் பிரதான வீதிக்கு புங்குடுதீவின் வரலாற்றுத்தலைவனும், தேசபக்தனும், வட்டாரத்தின் சிறந்த குடிமகனுமான அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்களின் பெயர்சூட்டிக்கௌரவித்தமை அமரர் ஆற்றிய அளப்பரிய சேவைக்கு எடுத்துக்காட்டாகும்.

"புகழால் எமக்கு புகழ்தந்த புருசோத்தமருக்கு புங்குடுதீவின் இதயம் நிறைந்த நன்றிகள்"

நன்றிகள்

தொகுத்தவர்.தொண்டர்
க.திருநாவுக்கரசு
(வே.க. அவர்களின் நினைவு மலரில் இருந்து)



அர்ச்சனாஸ் & கோ
2950 Kennedy Rd Scarborough
(Kennedy & Finch)
அனைத்துவகை பூஜைப்பொருட்களின்
களஞ்சியம்
Blu-ray Disc
Full HD
1080p
பூஜைப்பொருட்கள், மல்லிகைச் சரம், சமயப்புத்தகங்கள், Audio CD / Movie DVD,
Archanas.ca பூமாலைகள், பரதநாட்டிய ஆபரணங்கள், 416-292-0033
உங்கள் விழாக்களுக்கான Video & Photo தேவைகளுக்கும்.

புங்குடுதீவு கிராமத்தின் கல்வி நிலை அன்றும் – இன்றும்

பேராசிரியர்.கா.குகபாலன்
முன்னாள் துணைத்தலைவர்,
புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

கல்வியானது மனிதனின் இயல்பினையும் கலாசாரத்தினையும் மாற்றும் ஒரு சாதனமாகும். கற்றல், மற்றும் பயிற்சியினுடாகவும் தனிப்பட்டவர்களின் உள்ளார்ந்த வளங்களை பெருக்கிக் கொள்வதன் வாயிலாகவும் கல்வியறிவினையும் அதனூடாக பண்பாட்டு வளர்ச்சியினையும் எய்த முடியும் என கல்வியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அதாவது ஒவ்வொரு மனிதனதும் சமூக, பொருளதார பண்பாட்டு வளர்ச்சிக்கு கல்வி பெரும் துணை புரிவது மட்டுமல்லாது குறித்த குடும்பம், சமூகம், தேசியம் எனப் பல்வேறு மட்டங்களில் உயர்வினைத் தந்து அவர்களை சமூகத்தின் உயர்நிலையிலுள்ளவர்களாக பேணிவருவதையும் நாம் காணமுடியும். உலகில் பலநாடுகள் அங்கு வாழும் சமூகங்களின் கல்வி வளர்ச்சியூடாக மறுமலர்ச்சியினை பெற்ற வரலாற்று நிகழ்வுகளை நாம் அறிய முடியும். குறிப்பாக விருத்தி பெற்ற மேற்குலகத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு அங்கு நிலவி வந்த, வருகின்ற கல்வி நிலையே காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வகையில் கீழைத்தேச நாடுகளில் மக்களின் பொருளாதார சமூக பண்பாட்டு வளர்ச்சிக்கு அங்கு வாழ்ந்து வந்த மக்களின் முறைசாராத கல்வி நிலையே அடித்தளமாக அமைந்தது எனலாம். இந்த வகையில் புங்குடுதீவுக்கிராமத்தில் ஆங்கிலேயர் ஆட்சி உதயமாகும் வரை பலவகைப்பட்ட முறைசாராத கல்வி, மற்றும் பயிற்சி, வழிமுறை போன்றவற்றினூடாக மக்களது பொருளாதார, சமூக பண்பாட்டு வளர்ச்சியானது சிறப்புற்றிருந்தமை பற்றி பலர் ஆங்காங்கே கூறிச்சென்றிருப்பதை காணமுடிகின்றது. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சி உதயமாவதற்கு முன்னர் நிலவிய முறைசாராத கல்விப் பாரம்பரியமானது ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட முறைசார்ந்த கல்வியுடன் இணைந்து வளர்ச்சி பெற்று கிராமத்து வளர்ச்சிக்கு பெரும் துணைபுரிகின்றது எனலாம்.

இந்த வகையில் புங்குடுதீவுக் கிராமத்தின் கல்வியினூடாக ஏற்பட்டு வந்த சமூக, பண்பாட்டு மாற்றங்களை பின்வருமாறு காலரீதியாக வகைப்படுத்தி நோக்குதல் சிறப்பானது.

அ. வரலாற்றுக் காலம்
ஆ. போர்த்துக்கேசர், ஒல்லாந்தர் காலம்
இ. ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்
ஈ. சுதந்திரத்தின் பின்னரான காலம்
உ. 1991ம் ஆண்டின் பின்னரான காலம்

என்பனவே அவையாகும்.

அ. வரலாற்றுக் காலம்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு திராவிடர் குறிப்பாக தமிழர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் பொதுவாக இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகளைக் கைக்கொண்டிருந்தனர். கி.மு. 3ம் நூற்றாண்டிலே இலங்கையில் பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புங்குடுதீவுக் கிராமத்திலும் பௌத்தம் பரவியதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. இத்தீவு உட்பட ஏனைய தீவுகள் இந்து, பௌத்த துறவிகளின் தியானத்திற்கு ஏற்றவையாக விளங்கியிருந்தன. இந்நிலையில் பெருங்கற் பண்பாடு திராவிடருக்குரியது எனக் கருதுகின்றனர். இப்பண்பாடு பொதுவாக கி.மு. 900 - கி.பி 400 வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்தது என வரலாற்றாய்வாளர்கள் கூறிச் செல்கின்றனர். இப்பண்பாட்டு எச்சங்கள் புங்குடுதீவில், ஊரதீவு, வல்லன் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. பெருங்கற்பண்பாட்டில் புராதன இந்து சமய செய்திகள், அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே இலங்கையில் பிற இடங்களை போலவே இங்கும் இந்துசமயம் தொன்று தொட்டு நிலவியிருக்க வாய்ப்புண்டு. போர்த்துக்கேயர் வருகையினைத் தொடர்ந்து பிறமதச் சின்னங்கள் அழிக்கப்பட்டன அல்லது அழிந்துவிட்டன எனலாம்.

கி.பி 6ம் நூற்றாண்டில் பல்லவ பாண்டியர் காலத்திலும் (கி.பி 6 - 9ம் நூற்றாண்டு வரை) சோழர் காலத்திலும் (கி.பி 9 - 12ம் நூற்றாண்டு) பாண்டியர் காலத்திலும் (கி.பி. 13ம் நூற்றாண்டு) இலங்கையில் இந்து சமயச் செல்வாக்கு அதிகரிக்கலாயின. 13ம் நூற்றாண்டில் பாண்டியப் பேரரசின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட தமிழரசு ஒன்று நிறுவப்பட்டது. 1619ம் ஆண்டு போர்த்துக்கீசர் அதனைக் கைப்பற்றும் வரை நிலவியது எனலாம். இதனால் இப்பிரதேசத்தில் இந்துகலாசாரம் மேன்மையுறலாயிற்று எனலாம்.

இந்நிலையில் இந்துசமயத்தோடு இணைந்த முறைசாராத கல்வி வளர்ச்சியும் கோவில்களில் புராண படனங்களை இசைத்தும் மக்கள் தம் பண்பாட்டு வளர்ச்சியினைப் பேணிக்காத்தனர் எனவும், பரம்பரை பரம்பரையாக நிலவி வந்த வைத்திய முறைகள் இங்கு வாழ்ந்த மக்களது வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளதெனக் கூறப்படுகின்றது. இவற்றிற்கும் மேலாக திண்ணைப் பள்ளிகளும் இயங்கியதாக தெரிவிக்கப்படினும் அவை தொடர்பான விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பொதுவாக அவர்களால் தத்தம் சமயத்தில் அதிக அக்கறை கொண்டவர்களாகவிருந்த போதிலும் புங்குடுதீவுக் கிராமத்தில் இந்துசமயத்தைத் தழுவுபவர்களே அதிகமாக இருந்துள்ளனர். மிகச் சிறிய எண்ணிக்கையினரே கத்தோலிக்க மதம் சாரும் நிலையிருந்தது. எனினும் கல்வி நிலையிலும் பார்க்க பண்பாட்டு நிலைகளில் கணிசமான மாற்றங்கள் தென்படலாயின. கல்வியைப் பொறுத்தவரை முறைசார்ந்த கல்வி நிலைக்கான முதல்படியினை மேற்குறித்த ஆட்சியாளர்களினால் முன்னெடுக்கப்பட்டதற்கான குறிப்புக்கள் வரலாற்றில் உண்டு. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சி முடிவிலும் பிரித்தானியர் ஆட்சி தொடங்கிய பின்னரும் ஐரோப்பாவில் ஏற்பட்ட தாராள சிந்தனை-களைத் தொடர்ந்து மதசுதந்திரமும் ஏற்படலாயிற்று. எனவே யாழ்ப்பாணத்தின் ஏனைய இடங்களைப் போலவே புங்குடுதீவுக்கிராமத்திலும் பல இந்துக் கோவில்கள் அமைக்கப்படலாயின. இந்நிலையில் ஐரோப்பியர் மதத்துடன் கூடியதான கல்விக்கே முன்னுரிமை கொடுத்திருந்தமையால் மதம் மாறாதவர்கள் பாரம்பரிய பண்பாட்டினூடான கல்வியை மட்டுமே பெறக் கூடிய வாய்ப்பு இருந்துள்ளது எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சி

முன்னைய ஐரோப்பியர் ஆட்சியிலிருந்து வேறுபட்ட நிலையில் ஆட்சியை முன்னெடுத்த ஆங்கிலேயர் மதங்களுக்கான சுதந்திரத்தினை வழங்கிய நிலையில் முறைசார்ந்த கல்விக் கூட்டங்களை கிறிஸ்தவர் மற்றும் இந்துக்களால் நிறுவுகின்ற செயற்பாடுகள் இக்காலப்பகுதிகளில் உருவாகின. குறிப்பாக புங்குடுதீவுக் கிராமத்தில் 1833ம் ஆண்டு றோமன்கத்தோலிக்கப் பாடசாலையை கத்தோலிக்க மி'னரிமாரினாலும் 1850களில் புங்குடுதீவு வடக்கு, புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு இருப்பிட்டியில் அமெரிக்கமி'னரியினால் மூன்று பாடசாலைகள் நிறுவப்பட்டுள்ளன. அக்காலங்களில் கிறிஸ்தவ பாடசாலைகள் பொதுவாக மதம் சார்புடைய கொள்கைகளை பெரிதும் ஏற்றுச் செயற்பட்டதனால் இந்துக்கள் தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக இந்துப் பாடசாலைகளை நிறுவமுயன்றனர். குறிப்பாக கல்விமான் வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் முயற்சியி-னால் கணேசவித்தியாசாலை (1910) பராசக்தி வித்தியாசாலை (1910) சித்திவிநாயகர் வித்தியாசாலை (1914), சுப்பிரமணிய வித்தியாசாலை, (1925) போன்ற பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவை பின்னாட்களில் சைவ வித்-தியாவிருத்திச்சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சண்முகநாதன் வித்தியாசாலை (1925) கமலாம்பிகை வித்தியாசாலை (1935) திருநாவுக்கரசு வித்தியாசாலை (1935), இராஜேஸ்வரி வித்தியாசாலை) (1937) துரைச்சுவாமி வித்தியாசாலை (1939) ஆகிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1946ம் ஆண்டு புங்குடுதீவு மகாவித்தியாலயம், 1948ல் அரியநாயகன்புலம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, 1957ல் குறிகட்டுவான் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை என்பன ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து புங்குடு-தீவில் மொத்தமாக 15 பாடசாலைகள் 1991ம் ஆண்டு வரை இயங்கிக் கொண்டிருந்தன எனலாம்.

மேற்குறித்த 15 பாடசாலைகள் 1980கள் வரை புங்குடுதீவு கல்விப் பாரம்பரியத்தினை முன்னெடுத்துச் செல்வதில் பெரும்பங்கு கொண்டிருந்தன. பொதுவாக ஆரம்பத்தில் ஆரம்பக் கல்வியினையே பெரும்பாலான பாடசாலைகளில் போதிக்கப்பட்ட போதிலும் காலத்துக்கு காலம் பாடசாலைகளின் தகுதிநிலை உயர்த்தப்படவே இடைத்தரக் கல்வியினையே பெரும்பாலான பாடசாலைகளில் போதிக்கலாயின.

இதன்பெறுபேறாக பல மாணவர்கள் அரச தனியார், துறைகளில் தொழில்வாய்ப்பினைப் பெறும் சூழ்நிலை உருவாகின. குறிப்பாக 1930 களின் பின்னரான காலப்பகுதிகளில் தமிழாசிரியர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் போன்றோரின் வரவுக்கும் இப்பாடசாலைகள் பெரும்பங்கு கொண்டிருந்தன எனலாம்.

புங்குடுதீவுக் கிராமத்தின் கல்விப் பாரம்பரியமானது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. பொதுவாக முறைசாராத கல்வியினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட பாரம்பரியமானது பிரித்தானியர் வருகையினைத் தொடர்ந்து முறைசார்ந்த கல்வியினூடாக முன்னெடுத்துச் செல்லப்பட்டதன் விளைவாக சிறந்த சமூகத்தினை வளர்த்தெடுக்க முடிந்தது. அதாவது பாரம்பரிய விவசாய பொருளாதார அமைப்பில் வாழ்ந்து வந்த மக்களிடையே கல்விப்பாரம்பரியத்தின் ஊற்று படிப்படியாக பிரகாசித்து 1990ம் ஆண்டின் பின்னர் ஒளியில் மங்கல் நிலை ஏற்படுமளவிற்கு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைதான் காரணமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. அதாவது விவசாயப் பாரம்பரியத்துடன் இணைந்துகொண்டவர்களின் வெளியகல்வானது கிராமத்தின் வாழ்வியலும் வளத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள போதிலும் சென்றடைந்த பிரதேசங்களில் தொடர்ந்தும் தமது கல்விப் பாரம்பரியத்தை தக்கவைத்துக் கொண்டு வருகின்றனர். இருந்த போதிலும் தொடர்ந்தும் கிராமத்தில் வாழ்ந்து வரும் விவசாயம் சாராத மக்களின் கல்விநிலையானது மிகவும் பாதிப்படைந்த நிலையிலேயே உள்ளது என்பதே உண்மைநிலையாகும். எனவே இக்கட்டுரை 1990ம் ஆண்டிற்கு முற்பட்ட கல்வியும் அதனோடிணைந்த கல்விப் பாரம்பரியம் பற்றியதாகவும் 1990களுக்கு பின்னரான கல்விநிலை பற்றியதாகவே அமைகின்றது எனலாம்.

நாவலர் பெருமான் முன்னெடுத்த கந்தபுராண கலாசாரத்தினை வேலணையில் இருந்த நாவலரின் சீடர்களினால் முன்னெடுக்கப்படலாயின. இந்தக் கைங்கரியத்தினை கந்தப்பிள்ளை, நாகலிங்கம், ச.வினாசித்தம்பி, நா.சின்னத்தம்பி, நா. தில்லையம்பலம், வைத்தியர்.க. கணபதிப்பிள்ளை, க.சதாசிவம்பிள்ளை, வித்துவான் பொன்.கனகசபை, கை.நாகமணி, க.சேதுபதி, சிவஸ்ரீ கா.சொர்ணலிங்கம் குருக்கள், சதாசிவக் குருக்கள், ஸ்ரீநிவாசக் குருக்கள், க.செல்லத்துரை போன்றோர் ஆரம்பகரத்தாக்களாக இருந்து பணியாற்றியுள்ளர். இவர்களைத் தொடர்ந்து ஆ.தாமோதரம்பிள்ளை, ஆ.கந்தையா, நா.அப்பாப்பிள்ளை, க.சுப்பிரமணியம், கு.வினாயகமூர்த்தி, மா.பரராசசிங்கம், வை.குமாரசாமி, த.சிவகுரு, க.கணபதிப்பிள்ளை, தி.சதாசிவம் போன்றோர் புராணபடனம் வாசிப்பதிலும், பொருள் கூறுவதிலும் சிறப்பிடம் வகித்தனர். புராணபடனம் சமய அறிவை மட்டுமன்றி தமிழறிவையும் மக்களிடத்தில் வளர்க்கப் பெரிதும் உதவியது. இவர்கள் தவிர தமிழிலும், சைவத்திலும், சைவசித்தாந்தத்திலும் வைத்தியர் க.கணபதிப்பிள்ளை, வித்துவான்.பொன்.கனகசபை, வித்துவான் சி.ஆறுமுகம், க.சதாசிவம்பிள்ளை, பண்டிதர்.மு.ஆறுமுகம், பண்டிதர் வீ.வ.நல்லதம்பி, கலாநிதி.க.சிவராமலிங்கம்பிள்ளை போன்றோர் சிறப்பிடம் வகித்துள்ளனர்.

சென்ற நூற்றாண்டில் நீண்டகாலம் புங்குடுதீவின் கல்விப்புலத்தில் பிரபல்யம் வாய்ந்தவராக விளங்கியவர் பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை அவர்கள். இவர் தமிழிலும் இலக்கியத்திலும் புலமை கொண்டவர். பலநூல்களின் ஆசிரியர். வித்துவசிரோன்மணி கணேசையருடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தவர் 1953ம் ஆண்டு புங்குடுதீவில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவில் இந்நிய தமிழறிஞர்கள் மத்தியில் இவருக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவுக்கிராமம் தமிழ்புலமை சார்ந்த பல அறிஞர்களை பெற்றிருக்கின்றது. வித்துவான் சி.ஆறுமுகம், வித்துவான் பொ.கனகசபை, திருப்பூங்குடி வி.க.ஆறுமுகம், க.செல்லத்துரை, க.தர்மலிங்கம் (அம்பலவானர் வாத்தியார்) குணமாலை வாத்தியார் சு.சபாரத்தினம், வீ.வ.நல்லதம்பி, சு.வில்வரத்தினம், கு.வி.செல்லத்துரை, நா.சோமசுந்தரம், நா.கார்த்திகேசு, பண்டிதர்.மு.ஆறுமுகம், சி.க.நாகலிங்கம், க.சிவராமலிங்கப்பிள்ளை, ச.சொக்கலிங்கம், மு.நடேசு, கா.க.கனகசுந்தரம், சி.இரத்தினசபாபதி, க.முத்துத்தம்பி, நா.தர்மபாலன், திருமதி.பரிமளம், செல்லத்துரை, வே.க.ஏரம்பு, ந.தர்மலிங்கம், க.மகாலிங்கசிவம் போன்றோர் இவர்களில் சிலராகும். இக்கிராமத்தை வளம்படுத்திய அதிபர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக வித்துவான் சி.ஆறுமுகம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும், கலாநிதி.க.சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் யாழ்.இந்துக்கல்லூரியிலும் கற்பித்தவர்கள். இவ்விருவரும் தமது பாடசாலைகளில் பிரபல்யம் மிக்கவர்களாகவிருந்துள்ளமையால் தம்மை நாடிவரும் புங்குடுதீவு மாணவர்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கு பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொடுத்ததன் பயனாக அவர்களில் பெரும்பாலானோர் மருத்துவம்,

பொறியியல், கணக்கியல், மற்றும் கலைப்பகுதிகளுக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்தவர்கள். இவர்கள் இருவராலும் பயன்பெற்றவர்கள் இன்று உள்நாட்டிலும், சர்வதேசங்களிலும் கீர்த்தியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

1950 களின் முற்பகுதிவரை புங்குடுதீவுக் கிராமத்தில் மருத்துவ வசதிகளும் சேவைகளும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1942ம் ஆண்டு புங்குடுதீவில் அரசின் வைத்தியசாலையை அரசு நிறுவியது. வாணர் பாலம் பாவனைக்கு வரும் வரை இவ்வூர் மக்கள் தமது சாதாரண நோய்களுக்கு இவ்வூரில் வாழ்ந்து வந்த சித்த, ஆயுள்வேத வைத்தியர்களையே நம்பி வாழ்ந்துள்ளனர். இவ்வைத்தியர்களில் பெரும்பாலானோர் பரம்பரை வைத்தியர்கள். சிலர் ஆயுள்வேதக் கல்லூரியில் முறைப்படி கற்றவர்கள். இவர்களில் பலர் நடமாடும் வைத்தியர்களாகவிருந்துள்ளனர். இந்தவகையில் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மருதப்பர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் வைத்தியம். சோதிடம், வானசாஸ்திரம், மாந்தரீகம், போன்றவற்றில் சிறந்து விளங்கியவர். இவரின் மகன், விதானையார், சந்திரசேகரம், அவர்மகன் வினாசித்தம்பி. இவரின் சகோதரி திருவாத்தைப்பிள்ளை, மற்றும் வினாசித்தம்பி ஆசிரியரின் பிள்ளைகள் இரகுநாதப்பிள்ளை இலட்சுமணபிள்ளை, கனகசபை, மற்றும், சி.முருகேசு, வீ.தம்பிராசா, வி.கே.குணரத்தினசிங்கம் போன்றோர் பரம்பரை வைத்தியவர்களாக பிரகாசித்தவர்கள். இவர்கள் தவிர 1960களின் பின்னர் த.சிவானந்தன், த.இளங்கோவன், மன்மத ராசன் போன்றோர் வைத்தியர்களாகவிருந்து வருகின்றனர். வைத்தியர் வினாசித்தம்பி அவர்களின் மகன் இலட்சுமணபிள்ளை மற்றும் அவரின் பேரன் கலாநிதி பா.சிவகடாட்சம் போன்றோர் வைத்தியத்துறையில் விருப்புக் கொண்டு தமிழர் மருத்துவம் போன்ற பல நூல்களை வெளியிட்டு புகழ்பெற்றவர். பிரபல சோதிடர் குருமூர்த்தி அவர்கள் ஆயுள்வேத வைத்தியராகவிருந்துள்ளார். இவரது மகன் வினாயகமூர்த்தியும் தந்தை வழியில் தனது வைத்திய தொழிலை தொடர்ந்தவர். சைவசித்தாந்தி வைத்தியர் சி.கணபதிப்பிள்ளை அவர்கள் நாடறிந்த வைத்தியராக இருந்தவர்.

இருப்பிட்டிக் கிராமத்தில் வாழ்ந்து வந்த நா.தம்பிப்பிள்ளை அவர்கள் ஆயுள்வேதக் கல்லூரியில் முறையாக கல்விகற்று சிறந்த வைத்தியராக தன்னை உயர்த்திக் கொண்டவர். புங்குடுதீவு 2ம் வட்டாரத்தில் வாழ்ந்த அதிபர் பூராசா அவர்களின் தந்தையார் சுப்பிரமணியம் அவர்களும் அவரது மகன் சு.யோ.நடராசா அவர்களும் வைத்தியத்துறையில் சிறப்பாகப் பணியாற்றியவர்கள். புங்குடுதீவு கிழக்கில் தம்பிப்பிள்ளை வைத்தியர், தில்லையம்பலம் (வல்லன்) வைத்தியர், சின்னட்டி வைத்தியர், சௌரி, வைத்தியர், சூசைப்பிள்ளை வைத்தியர் போன்றோர் கிராமத்திற்கு வைத்திய சேவைகளை வழங்கிய பெருந்தகைகள். இவர்களைத் தவிர பாம்புக்கடி, வைத்தியராக புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த வைத்தியர் இராசையா என்பவர் தனது சேவையைத் திறம்பட செய்தவர். மிருக வைத்தியர்களாக இக்கிராமத்தைச் சேர்ந்த அருணாசலம் சின்னையா, அவரது மகன் சி.சத்தியமூர்த்தி என்போர் தொழில் ரீதியாக சிறப்புற்றிருந்தனர்.

1960 களைத் தொடர்ந்து ஆயுள்வேத வைத்தியர்கள் இக்கிராமத்தில் வைத்திய நிலையங்களை நிறுவி வைத்திய சேவையினை செய்துள்ளளனர். வைத்திய கலாநிதிகள் கணேஷ், கனகரத்தினம், இராசரத்தினம், சிவானந்தன் போன்றோர் முக்கியமானவர்கள். இவர்கள் ஆயுள்வேதத்துடன் ஆங்கில வைத்தியத்தையும் இணைத்து செய்துள்ளனர். வைத்தியர்களான இராசரத்தினம், சிவானந்தன் இருவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வைத்திய நிலையங்களை நிறுவி நடாத்தி வருகின்றனர். வைத்தியகலாநிதி.கணேஷ் அவர்களின் மகன்.க.ஸ்ரீதரன் யழ்ப்பாணப்பல்கலைக்கழக சித்த மருத்துவப் பட்டதாரி, முதுகலைப்பட்டதாரியும் கூட. இவர் இவர் யாழ்ப்பாணத்தில் பிரபல வைத்தியராக இருப்பதுடன் தனது பிறந்த கிராமத்திற்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் வந்து வைத்தியசேவையை நடாத்தி வருகின்றனர். இவரது மனைவியும் சித்த வைத்திய பட்டதாரி மட்டுமல்லாது சித்த வைத்தியதுறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவுமுள்ளார். இவர்களைத் தவிர செல்வி. முருகேசு (1ம் வட்டாரம்) அவர்களும் சித்த வைத்தியத்துறைப்பட்டதாரி. இவர் அரச நிறுவனத்தில் வைத்தியராக பணிபுரிந்து வருகின்றார்.

வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதன் 1960களில் சுகாதாரத் திணைக்களத்தில் இணைந்து இந்தியாவில் மருத்துவத்துறையில் பட்டம் பெற்றவர். புங்குடுதீவிலும் ஆனைக்கோட்டையிலும் மருத்துவ நிலையங்களை நிறுவி நடாத்தியவர். இவர் மருத்துவ, சுகாதாரதுறை சம்பந்தமாக பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர்களைத் தவிர இக்கிராமத்தில் பிறந்து வாழ்ந்த பலர் தற்போது வைத்திய நிபுணர்களாக உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் கடமையாற்றுகின்றனர்.

வைத்தியர் நிபுணர்களான சி.ஏரம்பமூர்த்தி ச.செல்வநாயகம், எஸ்.சண்முகலிங்கம், வெ.சுதர்சன், சி.வசந்தகுமார், இ.ரவீன்குமார், கி.ஸ்ரீபாஸ்கரன், திருமதி.து்யந்தி ஸ்ரீதரன், இ.ஜெயபூரணபாலா போன்றோர் அவர்களில் சிலராவார். புங்குடுதீவுக் கிராமத்தைச் சேர்ந்த பலர் அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் பணியாற்றி கிராமத்திற்கு பெருமை சேர்த்தவர்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த வீ.வ.வைத்திலிங்கம் பொறியியல் பட்டதாரி ஆவார். இவர் லண்டனில் பயின்று இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் உயர்பதவி வகித்தவர். பல சாதனைகளுக்குரியவர்.

யாழ்பாணப் பல்கலைக்ககழக முதல் புவியியல் பேராசிரியரான கலாநிதி.சோ.செல்வநாயகம் இக்கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தவிர பேராசிரியர் கலாநிதி.வி.சிவசாமி, பேராசிரியர்.கலாநிதி.கா.குகபாலன், பேராசான் ந.பேரின்பநாதன் சட்டப்பீடாதிபதி வி.ரி.தமிழ்மாறன், கலாநிதி.பாலசிவகடாட்சம், கலாநிதிக.சேமசுந்தரேஸ்வரன், திருமதி.யசோதா. பிரபாகர் போன்றோர் பல்கலைக்கழங்களில் தத்தம் துறைசார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டவர்கள்.

இக்கிராமத்தினை பிறப்பிடமாகக் கொண்ட பலர் பொறியியல் விரிவுரையாளராகவுள்ளார். என்.ஏ.வைத்திலிங்கத்தினைத் தொடர்ந்து பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு சென்றவர்களுக்கு அடுத்தபடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பலர் பொறியியல் கற்கைகளை கற்றுள்ளனர். மு.கோவிந்தன், க.சோமசுந்தரேஸ்வரன், கு.வி.மகாலிங்கம், நா.பூலோகநாதன் ஐ.மகாலிங்கம், சி.சிவபாதசுந்தரம், க.சந்திரபாலன், தி.தியாககாந்தன், த.மன்மதராசா, போன்ற பலர் பொறியியலாளர்களாக கடமையாற்றி வருகின்றனர். பொறியியலாளர்களின் பட்டியல் மிகவும் நீளமானது. முழுமையாகத் தரமுடியவில்லை.

கல்வித்துறையில் கிராமத்தைச் சேர்ந்த பலர் பிரகாசித்துள்ளனர். திருமதி.இரத்தினா ரத்தினம், த.துரைசிங்கம், சு.மகாலிங்கம், த.புலேந்திரன், வே.இ.பாக்கியநாதன் போன்றோர் கல்விப்பணியாளர்களாக கடமையாற்றியுள்ளர். அரசதுறைகளில் நிர்வாக அதிகாரிகளாக இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் கடமையாற்றி மண்ணுக்கு பெருமை சேர்த்தவர்கள். கு.நாராயணசாமி, தி.திருலிங்கநாதன், க.சண்முகநாதன், ஆ.தில்லைநாதன், எஸ்.சடாட்சரசண்முகதாஸ், என்.தனபாலசிங்கம், இ.இளங்கோவன், திருமதி.குணவதி சண்முகலிங்கம், போன்றோர் அரச நிர்வாக சேவையில் உயர்பதவி வகித்துள்ளவர்களாக உள்ளனர். இவர்களுடன் முன்னாள் கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர், பொ.பாலாசிங்கம், கூட்டுறவு ஆணையாளர் ஜோ.சின்னராசா போன்றோர் இக்கிராமத்தின் புதல்வர்கள்.

புங்குடுதீவுக் கிராமத்தில் பலர் சட்டத்தரணிகளாக தம்மை உயர்த்தி நீதிச் சேவையிலும் பொதுச் சேவையிலும் பொதுச் சேவையிலும் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். இவர்கள் காலஞ்சென்ற ப.கதிரவேலு அவர்கள் முக்கியமானவர். தீவகக் கூட்டுறவு வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். வீ.தவராசா, மு.நேமிநாதன், மா.தியாகராசா, மற்றும் காலஞ்சென்ற எஸ்.கே. மகேந்திரன் போன்றோர் புங்குடுதீனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இலக்கியத்துறையில் ஈழத்திலும் சர்வதேசங்களிலும் புகழ்பெற்றவர்கள் பலர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் முதன்மையான ஸ்தானத்தில் விளங்குபவர் பலர் உள்ளனர். இவர்களில் முதன்மையான ஸ்தானத்தில் விளங்குபவர் அமரர் மு.தளையசிங்கம் அவர்களாவார். இவரது இலக்கிய ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் இலக்கிய விற்பன்னர்களால் ஆய்வுப் பொருளாகப் போற்றிப் புகழப்படுகின்றது. இவை தவிர நாவேந்தன், தம்பிஜயாதேவதாஸ், நா.க.பத்மநாதன், க.திருச்செல்வம், த.இளங்கோவன், ஐ.சிவசாமி, மு.நேமிநாதன், இந்துமகேஸ், த.சிவதாசன், எஸ்.கே.மகாலிங்கம், சோம சச்சிதானந்தன், க.செல்வரத்தினம், எஸ்.எம்.தனபாலன் சித்ராமணாளன், ரவீந்திரன், நா.க.சாந்தலிங்கம், ஆர்.ஆர். பிரபா, வை.த.தளையசிங்கம், சி.சுந்தரதாசன், சு.கோகிலதாசன், மு.கோவிந்தன், ரஞ்சித் ரவீந்திரன், பாரதிகண்ணம்மா, போன்ற பலர் ஆக்க இலக்கியம் படைத்து புகழ்பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கையிலோ அன்றில் இந்தியாவிலோ விரல்விட்டு எண்ணக்கூடிய கவிஞர்களில் ஒரு சிலர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மு.பொ. என அழைக்கப்படும் மு.பொன்னம்பலம், காலஞ்சென்ற சு.வில்வரத்தினம் ஆகிய இருவருமே இத்தீவினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமது ஆக்கத்திறமையினால் சர்வ-தேச புகழ்பெற்றுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர குழந்தை இலக்கியம் மற்றும் மாணவர்களின் கல்விக்கான நூல்களை வெளியிடுவதில் மிகவும் முன்னணியில் இருப்பவர் கவிஞர் த.துரைசிங்கம் அவர்க-ளாவார். இலங்கை அரசினால் வழங்கப்பட்ட பலசாகித்திய விருதுக்கு இவர் உரியவராக விளங்குகின்றார்.

கலைகளில் ஒன்றான பேச்சுக்கலையில் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பலரினை அடையாளம் காணமுடிகின்றது. இவர்கள் சமய, அரசியல், இலக்கிய பேச்சாளராக தம்மை இனங்காட்டியுள்ளனர். இவர்களில் சமய மற்றும் இலக்கியப் பேச்சாளர்களாக முதன்மை வகித்தவர் யாழ்.இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் கலாநிதி.க.சிவராமலிங்கம்பிள்ளை அவர்களாவார். வில்லிசையோடு கலந்து மக்கள் மனங்களில் இடம்பிடித்த பேச்சாளராக காலஞ்சென்ற திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களைக் குறித்து கூறமுடியும். அரசியல் மற்றும் சமூக பேச்சாளராக இம்மண்ணில் பலர் வாழ்ந்துள்ளனர். இவர்களில் முதன்மையானவர் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் அமரர்.க.திருநாவுக்கரசு அவர்களை சுட்டிக்காட்டலாம். இலக்கியத்திலும் சமயத்திலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர் புலவர் ஈழத்துச் சிவானந்தன். சிறந்த பேச்சாளரான இவர் ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள் என்ற நூலை ஆக்கியதுடன் ஆலயமணி என்ற மாத சஞ்சிகையையும் வெளியிட்டார். இவர்கள்-தவிர நாவேந்தன், (திருநாவுக்கரசு) எஸ்.கே.மகேந்திரன், சு.யோ.பூராசா, வைத்தியகலாநிதி கணேஸ், எஸ்.கே. சண்முகலிங்கம், செல்வி.பொ.யமுனாதேவி போன்றவர்கள் எம்மண்ணுக்கு பெருமை சேர்த்தவர்கள். கர்நாடக இசைத்துறையில் இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் சர்வதேச புகழ்பெற்றுள்ளனர். திரு.தாமோதரம்பிள்ளை, பொன். சுந்தரலிங்கம், பொன்.சுபாஸ்சந்திரபோஸ், திருமதி.திருஞானம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இசைத்துறையில் 1990களின் பின்னர் மிகச் சிறந்த இசைமேதையாக வலம் வந்து கொண்டிருப்பவர் கலைஞன் சாந்தன் அவர்களாவார். இவரது பாடல்கள் ஈழத்திலும் புலம்பெயர் சமூகத்தினரிடையேயும் புகழ்பெற்றவை. அவர் புங்குடுதீவு வல்லன் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மனவளக் கலையினூடாக உடற்பயிற்சி, காயகல்பப்பயிற்சி, தியானப்பயிற்சி ஆகியவற்றை சிறப்பாகக் கற்று அதன் வழியொழுகி இந்தியாவிலும் ஈழத்திலும் புகழ்பெற்றவர். துணைப் பேராசிரியர் சி.முருகானந்தவேல் அவர்கள். ஆன்மீக வழிநின்று மெய்கண்டான் ஆதியினத்தில் ஆன்மீகப் பணியாற்றிய திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் இக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கல்விப் புலமையுடன் கூடிய பலர் கிராம பிரதேச அபிவிருத்திகருதி அரசியலில் ஈடுபட்டோர் இக்கிராம-த்தில் பலர் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக கிராமசங்கத் தலைமைப் பொறுப்பினை ஏற்று கிராம வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர்கள் அமரர்களான வ.பசுபதிப்பிள்ளை விதானையார், க.அம்பலவாணர், க.செல்லத்துரை, வீ.வ.நல்லதம்பி, எஸ்.சபாரத்தினம், வே.சி.அம்பிகைபாகன் (குமாரசாமி) கு.வி.தம்பித்துரை க.மதியாபரணம் போன்றவர்களை குறிப்பிட்டுக் கூறலாம். இவர்கள் தவிர பாராளுமன்ற தேர்தலில் க.அம்பலவானர் (பெரியவாணர்) எஸ்.அமரசிங்கம், வீ.வ.நல்லதம்பி, ப.கதிரவேலு, ப.கனகலிங்கம் என்போர் போட்டியிட்டாலும் வெற்றிபெறவில்லை. இருப்பினும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் வே.க.சோமசுந்தரம் அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவுக் கிராமத்தின் பொருளாதார சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர்கள் அமரர்களான க.அம்பலவாணர் (பெரியவாணர்), ச.அம்பலவாணர் (சின்னவாணர்) ஆகிய இரட்டையர்கள். இவ்விருவரும் தமது வாழ்நாள் முழுவதும் இக்கிராமத்தின் வளர்ச்சியையே கருத்திற்கொண்டு உழைத்தவர்கள். இவர்களது அயராத முயற்சியின் விளைவாக வேலணை புங்குடுதீவுக்கிடையிலான மூன்று மைல் தூர தாம் போதி அமைக்கப்பட்டதன் விளைவாக புங்குடுதீவுக் கிராமம் மட்டுமல்லாது தீவகத்தின் கல்வி மற்றும் சமூக, பொருளாதார நிலையில் பெரியமாற்றத்தினை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.


HomeLife Today Realty Ltd, Brokerage
Independently Owned and Operated
வீடு வாங்க, விற்க
உங்கள் கனவு இல்லத்தை நனவாக்க
Flexible Commission
Arul Thaninayagam
Sales Representative
Dir: 416-624-7971
Bus: 416-298-3200 | Fax: 416-298-3440
210-31 Progress Ave
Toronto, ON M1P 4S6
agent.arul@gmail.com | www.arul homes.ca


BALA SELVAM
Jewellery & Foreign
Mony Transfer
உங்கள் உறவுகளுக்கு
விரைவாகவும்
பாதுகாப்பாகவும்
பணம் அனுப்பிட
எம்மை நாடுங்கள்
Scan. Me
416-264-4000
2480 Eglinton Ave E, #6 Scarboroygh, ON, M1K 2R4

இன்றைய கல்வி நிலை

சிறப்பாக கட்டி வளர்க்கபட்ட புங்குடுதீவுக்கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினை நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தம் குறிப்பாக 1980 களிலிருந்து படிப்படியான மக்கள் வெளியகல்வு, மற்றும் 1991ம் ஆண்டு நிகழ்ந்த ஒட்டு மொத்த மக்கள் இடப்பெயர்வுகளும் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.
இக்கிராமத்தில் 1991ம் ஆண்டு வரையும் 15 பாடசாலைகள் இயங்கிவந்தன. 1991ல் ஆண்டு 1 தொட்டு ஆண்டு 13 வரையாலான வகுப்புக்களில் 3750 மாணவர்கள் கல்வி பயின்றனர். இடப்பெயர்வினைத்தொடர்ந்தும் தீவுப்பகுதிக்கான மக்கள் உள்வரவினை அரசு தடைசெய்ததன் விளைவாகவும் புங்குடுதீவு மகாவித்தியாலயம் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் யாழ்ப்பாண குடாநாட்டில் இயங்கலாயின. 1996ம் ஆண்டு இக்கிராமத்திற்கு மக்கள் வரவுக்கான வாய்ப்பு கிட்டவே சுப்பிரமணியவித்தியாலயம், கணேசவித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம் சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. 2009, 2010ம் ஆண்டின் பின்னர். சேர்துரைச்சாமி கனிஷ்ட வித்தியாயலம் றோமன் கத்தோலிக்கபாடசாலை, புங்குதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை, இராஜேஸ்வரி கனிஸ்ட வித்தியாலயம் என்பன மீள திறக்கப்பட்டன. எனினும் 1991ம் ஆண்டுக்கு முந்திய நிலைக்கு இப்பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களின் பரீட்சை அடைவுமட்டத்தினை முன்னெடுக்க முடியாத நிலையில் இருப்பதை காணமுடிகிறது. குறிப்பாக 1996ம் ஆண்டின் பின்னர் புலம்பெயர் மக்களின் கல்விக்கான உதவிகள், அரசு உதவிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் என்பன மாவட்டத்தின் ஏனைய பிரதேச பாடசாலைகளின் மாணவர்களை விட அதிகமாக கிடைக்கப்பெற்ற போதிலும் கல்விக்கான மாற்றத்தினைக் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுவது வேதனைக்குரியதாக விருப்பதை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமாகின்றது இவற்றினை நிருபிப்பதற்கு கடந்த 5 ஆண்டுகளில் இக்கிராமப் பாடசாலைகளின் ஆண்டு 5 புலமைப்பரிசில் க.பொ.த(உ/த) க.பொ.த(உயர்தரம்) ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் சான்றாகவுள்ளன.

பொதுவாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆரம்பக்கல்வியே அடிப்படையானது இப்பருவத்தில் கிடைக்கப்பெறும் சிறப்பான கல்வியே எதிர்கால கல்விக்கு அடித்தளமாக அமைகின்றது. குறிப்பாக ஆரம்பக்கல்வியின் அளவு கோலாக நடாத்தப்படும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக கல்விமான்கள் பெற்றோர், மாணவர் மத்தியில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் இல்லாமலில்லை. எனினும் பாடசாலை ஆசிரியர் குழாத்தின் கற்பித்தல் பெற்றோரின் அக்கறை, மாணவர்களின் கிரகிக்கும் தன்மை, போன்றன பரீட்சைப்பெறுபேறுகளைத் தீர்மானிக்கின்றன. இப்பரீட்சையே இடைத்தரக்கல்வியை தான் விரும்பும் பாடசாலையில் கற்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.. ஆனால் ஆரம்பக்கல்விக்கான அடித்தளம் இப்பாடசாலைகளில் அமையாததே இத்தகைய பின்னனிலைக்கு காரணமாக அமைந்துள்ளது. ஆனால் இது தொடர்பாக ஒருவரை ஒருவர் குறை சொல்லும் நிலைப்பாடே தொடர்ந்தவண்ணமுள்ளன.

1997ம் ஆண்டிலிருந்து 2008ம் ஆண்டு வரையும் இக் கிராம பாடசாலைகளில் 5 மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்திருந்துள்ளனர். 2009ம் ஆண்டிலிருந்து கல்வித்திணைகளத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய புள்ளிவிபரங்களின் பிரகாரம் பாடசாலைகளின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

அட்டவணை I

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை புங் / மகாவித்தியாயலயம்

ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தி படைந்த மாணவர்கள்	சதவீதம்
2009	24	00	0.0
2010	18	01	5.6
2011	31	01	3.2
2012	11	00	00
2013	17	00	00

அட்டவணை II

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை புங் /கணேச வித்தியாயலயம்		
ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தியடைந்த மாணவர்கள்
2009	13	00
2010	18	00
2011	18	00
2012	15	00
2013	12	00

அட்டவணை III

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை புங் /சித்திவிநாயகர் வித்தியாயலயம்		
ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தியடைந்த மாணவர்கள்
2009	14	00
2010	17	00
2011	18	00
2012	8	00
2013	8	00

அட்டவணை IIV

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை புங் /கணேச வித்தியாயலயம்		
ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தியடைந்த மாணவர்கள்
2009	6	00
2010	11	00
2011	16	00
2012	9	00
2013	10	00

அட்டவணை V

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை புங் /சுப்பிரமணிய வித்தியாயலயம்			
ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தியடைந்த மாணவர்கள்	சதவீதம்
2009	26	01	3.8
2010	23	00	00
2011	27	00	00
2012	22	01	4.5
2013	22	00	00

ஆதாரம்:- வேலணை கல்வித் திணைக்கள குறிப்பேடுகளிலிருந்து பெறப்பட்டவை

2009-2013ம் ஆண்டு காலப்பகுதியில் சகலபாடசாலைகளிலும் 405 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றியிருந்த நிலையில் 4 மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. 2014ம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஒரு மாணவனும், துரைச்சாமி வித்தியாலத்தில் ஒரு மாணவியும் சித்தியடைந்துள்மைக் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு மாணவரின் ஆரம்பக்கல்வியில் தளர்வு ஏற்ப்படும் பட்ச்சத்தில் இடைத்தரக்கல்வியில் பின்னடைவு ஏற்படுவது சாதாரண நிகழ்வே. இத்தகைய பின்னடைவு நிலைக்கு பெற்றோரின் பொருளாதர பின்னிலை, மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ளாமை, பெற்றோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமை, பாடசாலைக் கற்பித்தல் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள், தனியார் கல்வி நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலை, புறச் சூழல் காரணிகள் இடம் தராமை போன்ற பல காரணிகளைக் கூறினும் இக்கிராமத்தில் வாழ்ந்துவரும் பெரும்பாலான பெற்றோர்கள் கல்வியைப் பொறுத்தவரை முதல் பரம்பரையினாகவிருப்பது பிரதான காரணிகளில் முக்கியமானது. ஆனால் இதனை மறுதலிக்கும் பெற்றோர்கள் பாடசாலைகளில் மாணவர்களின் அடைவு மட்டத்தை எட்டக்கூடிய வகையில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமையே பிரதான காரணிகளில் ஒன்றாகும் எனத் தெரிவிப்பதையும் காணமுடிகிறது. இது தொடர்பாக அதிபர்கள் மட்டத்திலான கலந்துரையாடலில் பொருத்தமான ஆசிரியர்களை கல்வித்திணைக்கத்தினால் வழங்கப்படாமையே முக்கிய காரணி ஒன்றாகக் தெரிவிப்பதையும் மறுப்பதற்கில்லை.

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை

பொதுவாக புங்குடுதீவு கிராமத்தில் 1990ஆம் வரை ஏழு பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர வகுப்புக்கள் வரை கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. இவைதவிர ஆண்டு 5, ஆண்டு 8க்கான புலமைப் பரிசில் பரீட்சையில் பலர் சித்தயடைந்து வேலணை, யாழ்ப்பாணம், நெல்லியடி பாடசாலைகளில் இடைநிலைக்கல்வியினையும் உயர்கல்வியையும் பூர்த்தி செய்து பலர் தத்தம்துறைசார் பட்டதாரிகளாக வெளியேறி கிராமத்துக்கு பெருமை சேர்த்தனர். உதாரணமாக 1950 - 1990 காலயிடையில் புங்/ சித்திவிநாயகர் வித்தியாலத்தில் கிடைக்கப்பெற்ற தரவுகளின் பிரகாரம் 85 பேர் பல்கலைக்கங்களில் பயிற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே போலவே ஏனைய பாடசாலைகளிலிருந்தும் பல்கலைக்கழத்திற்கு சென்றுள்ளனர். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் குறிப்பாக கல்வித்துறையில் அதிகளவானோர்ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 1991ம் ஆண்டு இடப்பெயர்வானது கல்வியில் ஆர்வம் கொண்ட பெற்றோர்களின் நிரந்தர வெளியிடப்பெயர்வானது கிராமத்தின் மாணவர் கல்வி பின்தங்கிய நிலை ஏற்படக் காரணமாக அமைந்துவிட்டது. குறிப்பாக இக்கிராமத்தை சேர்ந்த கல்வியில் அக்கறை கொண்டவர்களின் சர்வதேச இடப்பெயர்வானது கல்வியின் தேக்கத்தினை ஏற்படுத்தியதில் பிரதான காரணியாகவும் அமைந்துள்ளது 1996ம் ஆண்டின் பின்னார் இக்கிராம பாடசாலைகளில் இடைநிலை கற்கை மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. இருப்பினும் அண்மைகாலங்களில் மாணவர் வரவு ஒரளவுக்கு திருப்தியாக இருந்த போதிலும் க.பொ.த சாதாரணதரத்தில் பூரண சித்தியினை பெற்றுக்கொள்வது தொடர்ந்தும் பின்னிலையியேலே காணப்படுகின்றன எனலாம். 2006 - 2013 ஆம் ஆண்டு வரையும் க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் சித்தியடைந்த மாணவர்களினது எண்ணிக்கையும் அட்டவணை VI இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை VI

க.பொ.த (சாதாரணதரப்) பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் - 2006 - 2013

ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	சித்தியடைந்த மாணவர்கள்	சதவீதம்
2006	49	05	10.2
2007	79	12	15.2
2008	50	07	14.0
2009	53	10	18.9
2010	65	22	33.9
2011	82	14	17.1
2012	75	24	32.0
2013	52	25	48.1

ஆதாரம்:- வேலணை கல்வித் திணைக்கள குறிப்பேடுகளிலிருந்து பெறப்பட்டவை

2010ம் ஆண்டின் பின்னர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் படிப்படியாக உயர்வடைந்து காணப்படினும் கணிதம் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியபாடங்களில் சித்தியடையும் நிலை தொடர்ந்து பின்தங்கியிருப்பதை சகல பாடசாலைகளிலும் அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதற்கான தகுதியான ஆசிரியர் வளங்கள் காணப்படாமையும் காரணிகளில் ஒன்றாகவுள்ளது. புலம்பெயர்வுகளின் உதவிகள் இவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு வழங்கப்படுமிடத்தும் தனிப்பட்ட வகுப்புக்களுக்கு மாணவர்கள் வரவுமிகவும் குறைவானதாகவுள்ளது. இக் குறைபாட்டின் நிவர்த்தி செய்ய பலரது உதவிகள் கிடைக்கப்பெறினும் உரிய முறையில் பயன்படுத்தாமை ஒரு பெரிய குறைபாடாகவேயுள்ளது. மேலும் புங்குடுதீவு கிராமத்தில் மாணவர்கள் பாடசாலைகளின் வெளியில் குறிப்பாக தனியார் பாடசாலையில் கற்பதற்கான சூழல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலை காணப்படுவதற்கு குடும்பச்சூழல், போக்குவரத்து வசதிகளின் மட்டுப்பாடு, சுற்றுச்சூழல்ப்பாதிப்பு, இளவயது விவாகம், பெற்றோர் அக்கறையின்மை போன்ற காரணிகள் தடையாகவுள்ளன எனலாம்.

க.பொ.த உயர்தரப்பரீட்சை

புங்குடுதீவில் உள்ள பாடசாலைகளில் மகாவித்தியாலயம் ஒன்றே க.பொ.த உயதர வகுப்பில் மாணவர்கள் கற்கும் வாய்ப்பு உண்டு. 1970களின் பிற்பகுதிகளிலிருந்தே இப்பாடசாலையில் கலைப்பிரிவில் மட்டும் மாணவர்களை உள்வாங்கி கற்பித்து வருகின்றது. ஆரம்பகாலங்களில் குறைந்த மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இக்கிராமப்பாடசாலைகளிலிருந்து க.பொ.த உயர்தர வகுப்பில் கற்பதற்கான பெறுபேறுகள் உள்ள வசதியான மாணவர்கள் வேலணை மற்றும் யாழ்ப்பாணக்கு சென்று விடுவது வழக்கமாகும். பொருளாதார ரீதியில் வசதிகுறைந்த மாணவர்களே இங்கு கல்வியினைத் தொடர்கின்றனர். இந்த வகையில் இப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்கள் பிற்காலத்தில் உயர் தொழில்களில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் திரு.ந. தர்மபாலன் யாழ்ப்பல்கலைகழக பொருளியல் பட்டதாரி, இவர் புங்குடுதீவு மகாவித்தியாயலத்தின் அதிபர் பதவியினை அலங்கரித்தவர். திரு.ப.சுந்தரலிங்கம் பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி உதவித்திட்டயிடல் அதிகாரியாக பல மாவட்டங்களில் பணியாற்றியவர். வேறு சிலர் நாட்டின் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

1990களின் பின்னர் உயர்வகுப்பில் கல்வி கற்கும். மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து செல்லலாயின. 1996ம் ஆண்டு தொட்டு உயர்வகுப்பில் கலைப்பிரிவில் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பலர் பல்கலைக்கழகம் செல்வதற்கான தகுதியினைப் பெற்றிருந்த போதிலும் தீவுப்பகுதியானது கல்வி தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருப்பதனால் பல்கலைக்கழக நுழைவுக்கான வெட்டுப்புள்ளி அதிகமாகவிருப்பதால் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் உண்டு. இந்நிலையில் 2006ம் ஆண்டு ஒருவரும் 2010ம் ஆண்டு ஒருவரும் 2013ம் ஆண்டு இருவருமாக நால்வர் பல்கலைக்கழகத்திற்கு சென்றுள்ளனர். 2009- 2013 வரையிலான காலப்பகுதியில் இப்பாடசாலையின் க.பொ.த உயரதரப்பரீட்சைப் பெறுபேறுகள் பின்வருமாறு அமைகின்றது.

அட்டவணை VII

க.பொ.த (சாதாரணதரப்) பரீட்சையில்
தோற்றிய மாணவர்கள் - 2009 - 2013

ஆண்டு	தோற்றிய மாணவர்கள்	மூன்றுபாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள்	சதவீதம்
2009	4	4	100.00
2010	10	7	70.0
2011	7	6	85.7
2012	11	8	72.7
2013	9	8	88.8

ஆதாரம் கல்வித்திணைக்களம் வேலணை

பொதுவாக புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் புவியியல், இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், தமிழ் ஆகிய நான்கு பாடங்கள் போதிக்கப்படுகின்றன. மேற்குறித்த நான்கு பாடங்களில் கற்பித்த ஆசிரியர்கள் பாராட்டுகுரியவர்கள். வசதிவாய்ப்புக்கள் குறைந்த நிலையில் வாழ்ந்து வரும் மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்கு பெரிய முயற்சியை மேற்கொண்டிருந்தனர் எனக் கூறிக்கொள்ளலாம். அட்டவணை VII ன் பிரகாரம் உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் ஏறத்தாழ 75.0 சதவீதத்திற்கு மேல் காணப்படுகின்ற போதிலும் மூவர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புகிடைத்தது. இது வருந்தத்தக்கதாகும் தகுதிபெற்றும் நுழைவை எட்டமுடியாததற்கு மாணவர்களை குறைகூற முடியாது. யாழ்ப்பாணக்குடாநாட்டில் காணப்படுவது போல ரியூசன் வசதிகள் அல்லது பெற்றோரின் தனிப்பட்ட கண்காணிப்புகள், கற்றலுக்கான சூழல் இக்கிராம மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. இருப்பினும் அண்மைக் காலங்களில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கனடா பழைய மாணவர் சங்கம் சர்வோதயத்தினூடாக அனைவருக்கும் பல உதவிகளைச் செய்து அவர்களின் கல்விக்கு துணைபுரிந்து வருகின்றது. இதேபோல புலம் பெயர் நாடுகளில் உள்ள கிராமத்தை நேசிக்கும் அமைப்புக்களும், தனிப்பட்டவர்களும் உதவிகளை வழங்கி வருகின்றனர். இது எதிர்காலத்தில் பயனைக் கொடுக்கும் என நம்பலாம்.

எவ்வாறெனினும் புங்குடுதீவுக் கல்வி நிலையில் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான மற்றும் கணிதக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலை தொடர்கின்றது. தற்போது அரசின் கல்வித்திட்டத்தில் தொழில்நுட்ப பாடம் உட்புகுத்தப்பட்டு அதற்கான கட்டிடம் என்று புங்குடுதீவு மகாவித்தயாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே விஞ்ஞான தொழில் நுட்ப பிரிவுகளை இப்பாடசாலையில் ஆரம்பிக்கபட வேண்டியது காலத்தின் கட்டயமாகும்.

கல்வி நிலையினை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்

ஒரு குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ கல்வி மேம்பாட்டுக்கு கூட்டு மொத்த நிறுவனங்களினது உந்துசக்தியூடாகவே பெறப்படமுடியும். குடும்பம், சமூகம், பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என சகலரும் இணைந்து செயற்பட வேண்டும். குறிப்பாக யுத்த வடுக்களைச் சுமந்து பின்தங்கிய பொருளாதார, சமூக பண்பாட்டு சூழல் காணப்படும் புங்குடுதீவுக் கிராமத்தில் கல்வியினூடாக செழிப்பினைப்பெற சகலரும் இணைந்து செயற்படல் வேண்டும். குறிப்பாக இக்கிராம மக்களிடையே குறிப்பாக பெற்றோர்களிடையே விளிப்புணர்வினை ஏற்படுத்துவது பிரதான செயற்றிட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும் பெற்றோர்களின் பின்னணி பிள்ளைகளின் கல்விக்கு உகந்ததாகவிருக்கவில்லை. அதனை மாற்றியமைத்தல் வேண்டும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதோடு மட்டுமே அவர்களின் செயறபாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கற்றலுக்கான சூழல் பாடசாலைகளில் உண்டா என்பதை அறிவதில் பின்னிற்கின்றனர். மேலும் மாணவர்களைப் பொறுத்தவரை கற்றல் செயற்பாடுகளை பெரிதும் விரும்பியேற்பவர்களாக காணப்படவில்லை. இது பொதுவாக அவதானிக்கப்பட்ட ஒன்றாகும். இதில் பெற்றோர்கள் பெரும்பங்கு கொள்ள வேண்டும். ஆனால் அது ஒரு கேள்விக்குறியே. பெற்றோர் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருப்பவர்களாக விருந்தபோதிலும் அதனை மேம்படுத்தாதிருப்பதற்கு அவர்களும் காரணகர்த்தாக்களாகவுள்ளனர் என்பது கசப்பான உண்மை. உழைப்புகான வாய்ப்பு குறைவாக விருந்தபோதிலும் கிடைக்கப்பெறும் உழைப்பினை உரிய முறையில் பயன்படுத்தாமை, கிடைக்கும் ஊதியத்தின் குறித்த பகுதியை பிள்ளைகளின் கல்விக்கு செலவிடுவதில் பின்னிற்றல், புலம்பெயர்வுறவுகள் உதவிசெய்ய வேண்டும் என எதிர்பார்த்தல் போன்றன பெற்றோரிடத்தில் காணப்படும் பண்புகளாகவுள்ளது.

பாடசாலைகளில் கற்றலுக்கான சூழல் யுத்தம் முடிவுக்கு வந்து இன்றுவரை முற்றாக ஏற்படுத்தப்பட்டுள்ளது, எனக்கூறமுடியாது. ஆசிரியர்களில் 98.0 சதவீத்தினர் யாழ்குடாநாட்டிலிருந்து நாள் தோறும் வந்து செல்பவர்கள். இதனால் அவர்களது முழுமையான ஆற்றல்களை மாணவர்களால் பெற்றுக் கொள்ள

முடியவில்லை. என்ற ஆதங்கம் மாணவர் மத்தியில் இருப்பதைக் காணமுடிகின்றது. கல்வித்திணைகளம் ஆசிரியர் வளத்தினைத் தருகின்றார்கள். ஆனால் பொருத்தமான ஆசிரியர்களை தருகின்றார்களில்லை என பாடசாலை அதிபர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் உண்மையுண்டு. இதனான இக்கட்டுரை ஆசிரியரிடமே அதிபர்களால் எடுத்துக்கூறப்பட்டுள்ளது குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் பாடத்திற்குரிய ஆசிரியர்கள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. தமிழ், சமய பாடத்திற்கு சங்கீத, நடன ஆசிரியர்களின் கற்பிக்க வேண்டிய சூழல் நிலவுகின்றது. எனவே ஆசிரியவளம் உரியமுறையில் பகிரப்படாத நிலையானது மாணவர்களின் கல்விக்கு பெரிய இடையூறாகவேயுள்ளது. உயர்கல்வியில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி இளயவயது விவாகமானது இக்கிராமத்தில் யுத்தம் ஓய்விற்கு பின்னர். அதிகரித்து செல்வதும் காரணிகளில் ஒன்றாகும். மாணவர் குடும்பச்சூழல், வீட்டுச்சூழல் என்பன பாடசாலைக்கு வெளியிலான கல்விக்கு இடையுறாகவுள்ளது. குறிப்பாக ரியூசன்வசதிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. இருப்பினும், தனிப்பட்ட சிலர் இலவசமாக புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ரியுசன் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். ஆனால் அவ்வகுப்புகளுக்கு மாணவர் வரவு படிப்படியாகச் குறைவடைந்து செல்வதாக நிதி உதவி வழங்குபவர்கள் கவலையுடன் தெரிவித்துவருவதையும் அவதானிக்க முடிகிறது.

இதற்கான தீர்வு தான் என்ன?

பின்தங்கிய பொருளாதார, சமூக பண்பாட்டு நிலையில் வாழ்ந்து வரும் கிராமம் ஒன்றின் கல்வி வளர்ச்சிக்கு கூட்டுப்பொறுப்புடனான செயற்றிட்டங்களே அவசியமானது இதில் பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வித்திணைக்களத்தினர், அரசு மற்றும் உள்ளூர் அரசியல் வாதிகள் என்போரின் கூட்டுப் பொறுப்பானது அவசியமானதாகும். மேற்குறித்தவர்களிடையேயான நெருக்கமான உறவுகள் இல்லாமை பெரும் குறைபாடாகவுள்ளது. குறிப்பாக ஏற்கனவே குறிப்பிட்டது போல பெற்றோர்களுக்கு கல்வியின் மகத்துவம் பற்றிய விளிப்புணர்வினை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாது அவர்களின் கல்வி தொடர்பான விடயங்களை நாளாந்தம் பெற்றோர் அக்கறை கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும் குறிப்பாக பெற்றோர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் போன்றோர் கல்லூரி அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் வேண்டும். குறிப்பாக பாடசாலைகளில் அதிபரைத்தலைவராகக் கொண்ட பழையமாணவர் சங்கம், மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (அரசின் புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்திச்சங்கமானது ஆசிரியர், பெற்றோர் பழைய மாணவர்களைக் கொண்டு இயங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.) என்பனவற்றை உருவாக்கி அவர்களின் ஆலோசனைகளை பெற்று செயற்படுத்தபடல் வேண்டும். ஆனால் இக்கிராமத்தின் பெரும்பாலான பாடசாலைகளில் இவை உரிய முறையில் செயற்படுத்தாத நிலை காணப்படுகின்றது. கல்வித்திணைக்களத்தின் சுற்றுநிருபத்திற்கேற்ப இவ்வமைப்பு அமைக்கப்பட்டுள்ளதே தவிர இயக்கமற்ற ஒன்றாகவேயுள்ளது. என்பதை கிராமத்து பல பெற்றோர்கள் அங்கலாய்க்கின்றனர். மேலும் பாடசாலையில் ஆசிரியர் நியமனத்தில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களை வழங்குகின்றார்களேயொழிய கற்பிக்கும் பாடங்களுக்கு ஏற்ப நியமிக்கப்படுவது மிகவும் குறைவாகயுள்ளது. உதாரணமாக இக்கிராமத்துப்பாடசாலை ஒன்றில் கணிதம் விஞ்ஞானத்திற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் சங்கீதமும் நடனத்திற்கு மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது மாணவர்களின் கல்வியில் எவ்வளவு தாகத்தினை ஏற்படுத்தும். இதுபற்றி சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது.

புலம் பெயர் சில உறவுகள் இக்கிராமத்துக் கல்விக்காக தமது உழைப்பில் ஒரு பகுதியை வழங்குகின்றனர். இது வரவேற்க்கத்தக்கது. ஆனால் அது வழங்கப்படும் முறையில் மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும். அதாவது நேரடியாக மாணவர்களுக்கு வழங்குவதை விடுத்து அவர் எங்கு தனியார் கல்வியை பெற்றுக் கொள்கின்றார்களோ அவர்களுக்கு வழங்குவதன் மூலம் மாணவர்களின் வரவினை மேம்படுத்த முடியும் இவ்வாறான நிதி, பொருள் உதவிகளை வழங்கும் உறவுகள் உள்ளூர் மட்டத்தினருடன் இணைந்து உளளூரில் இதற்கென ஒரு அமைப்பினை நிறுவி அதனூடாக வழங்கின் உரிய பலனைப் பெற்றுக் கொள்ளவாய்ப்புண்டு.

பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரச பாடசாலைகளுடன் தனியார் பாடசாலைகள் (Tution center) இயங்கி வருகின்றன. மாணவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு செல்லும் நிலை உண்டு. புங்குடுதீவு கிராமத்தில் ஒரிரு தனியார் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அவை முழுமையான, நிறைவான கல்வியை வழங்குவதாகவில்லை ஆசிரியர் பற்றாக்குறை உண்டு எனவே புலம்பெயர் உறவுகள் புங்குடுதீவில் மேற்கு, மத்தி, கிழக்கு பிரிவுகளில் தனியார்வகுப்புக்களை நடாத்துவதுடன் இலவசமாக கல்வி போதிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவை ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்டதாக அமைவதுடன் இதனூடாக பெற்றோர்களுக்கு விளிப்புணர்வினை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

கல்வியானது வேறொருவரால் திணிக்க முடியாது தானே பெற்றுக் கொள்ளவேண்டும். வேறொருவரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவே எமது சமூகம் விழித்தெழுதல் வேண்டும். எதிர்காலத்தை கல்வியினூடாகவே கட்டியெழுப்பமுடியும். கல்விக்கு அழிவில்லை இதனை உணர்த்து செயற்படின் கிராமத்து கல்வி வளம் பெறும்.

